www.tamilarangam.net

PAYA
?7 RUE DE COLOMBES
?2600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

Kaya

# தூண்டில்

## விடிவை நோக்கி....

தோழியே !
உடைந்த பொம்மைகளுக்காக
உன் விழிகள் சிந்தியது
ஆயிரங் கண்ணீர்த் துளிகள்
அன்று நீ
சிந்திக்கத் தெரியாத
சிறுபிள்ளை.

காலங்கள் உன்னை
கன்னியாக்கியது.
சடங்கு நாடகத்தில்
நீயே பொம்மையாக்கப்பட்டாய்

மாலை சூடியவனை
மண்டியிட்டுத் தொழுதாய்
மௌனங்களையே
வாழ்க்கையாக்கிக் கொண்டாய்

பாதிப்பை உணராமலேயே
நீ
பாவிக்கப்பட்டாய்.

மதங்களையும், மரபுகளையும்
கூறியவர்கள்
உனக்கு
வாழ்க்கையின்
நிஜ வெளிச்சத்தைக்
காட்டவில்லை.
அதனால்தான்
இன்னும் நீ இருட்டிலேயே...

விடுதலைக்கு நீயேன்
விலங்கு போடுகிறாய்?
விடிவொன்று எங்களுக்கு
வேண்டுமென்று
விளங்கிக் கொள்.

வேடத்தைக்
கலைத்துவிடு.
மௌனங்களும் இன்றே
மரணிக்கட்டும்.

வெளியே வா.
வெளிச்சம் உனக்காகவும்தான்.

பாதையில் தடைகள் வரலாம்.
பயப்படாதே !
ஒதுக்கிவிட்டு முன்னேறு.
ஒதுங்கி விடாதே !

அதோ —
உனக்கு முன்னரே
முன்னேறிச் செல்கிறார்களே
அவர்களும்
விடுதலையை நோக்கி...

இணைந்து கொள்.
இனிமேல்
வெற்றி உனக்கே.

ஞா. நிருபா.

TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 25

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மலைகளைப்

# பொசுக்கும்

# வாலிபம்.

இருளடர்ந்த என் உலகத்தில்
துயரத்தின் ஒளிக்கீற்றுகள்தான்
என் பாதங்களுக்கு வழிகொடுத்தன.

மலைகளும் அருவிகளும் நிறைந்த இந்த பாலைவனத்தில்
பசி எனக்குச் சோறூட்ட
வறுமை ஆதரவோடு வளர்த்தெடுத்தது.

அவை பாலைவனங்களா.....?
இல்லை.
இன்னுமின்னும் கொடியது.

ஈரலித்த மண்ணில்
ஆழப் பதிந்தது என் சோகத்தின் சுவடுகள்
என் வரலாற்றை மறுபதிப்புச் செய்துகொள்ளும்.

இன்னும்
இன்னும்
...... ஏன்?

காலம்
வட்டமான வரிக்கோடுகளாக வலம் வந்துகொண்டிருக்க
இன்பம்,
அவை எட்ட நின்று சிரித்துவிட்டு
கிட்ட வந்து சோகச் சூட்டுக்குள் எரிந்து போகின்றன.

அடிக்கடி
துடிப்பிழந்து போகும் என் இதயத்திற்கு
அந்த இன்பங்கள்தான் 'வாழ்விருக்கு' என
வாழ்வை இழுத்து வருகின்றன.

இருக்கிறதா...?
இருக்கு என்ற ஏக்கம்தான்
..... வாழ்வா?

www.tamilarangam.net

அன்பு, காதல், ஊடல் - உறவு
எல்லாமே
எனக்கும் இருக்கிறதே....
ஆயினும்
இவற்றைப் பாய்ச்சுவதற்கு
இத்தனை கடத்தற்கரிய சுவர்களா?

ஓடிவரும் குழந்தையின் உச்சி முகர்வுக்காக
ஏங்கி.... ஏங்கி
எத்தனைதரம் கைகளை நீட்டி
ஒடித்துக்கொண்டு விட்டேன்.

இந்தப் பெருமதில்களை எழுப்பியவர் யார்....?
அதைத் தூசி தட்டிப் பழுதுபார்க்கும் வாரிசுக்கள் யார்...?

— கலைச்செல்வன்

---



"என்னதான் இருந்தாலும் உங்கடை நிலைமை இப்பிடி ஆகியிருக்கக் கூடாது"

"நானாவது பறவாயில்லை. மகளுக்கு யேமனியில மாப்பிளை தேடி கட்டி வைச்சு, இப்ப கமண்டலம், தண்டு, விரிப்போடயாவனா இருக்கிறன். னா னுக்கு அங்கால இருக்கிறவர் பாவம். கனடாவில மாப்பிளைபிடிச்சு, இப்ப கட்டத் துண்டே இல்லாமல் ஒளிச்சிருக்கிறார்"

— கின்னன்ரை.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்களும், வாழ்க்கையும்.

உலக சனத் தொகையில் அதிக எண்ணிக்கையைக் கொண்டதாகக் கருதப்படும் பெண்களின் வாழ்வு அடிமை நிலையில் காணப்படுவது கேள்விக்குரியதே. இப்பெண் அடிமைத்தனம் மனிதன் — தோன்றிய காலந்தொட்டே ஆரம்பமாகியதல்ல.

மனிதன் தோன்றிய ஆரம்பகாலப் பகுதியில் ஆண், பெண் இரு பாலாரிடையேயும் சமமான வாழ்வு முறையும், அக் கால சமூக அமைப்பின் தலைமையைப் பெண்களே ஏற்றுள்ளதும் வரலாற்று உண்மையாகும். அக் காலப் பகுதியிலான வாழ்க்கை முறை தான் தாய்வழிச் சமூகம் என வழங்கப்படுகிறது.

காலப் போக்கில் முன்னேறி வந்த மனித வாழ்க்கை-முறையில் உழைப்பு அதிகரித்து, அதனால் உற்பத்தியும் அதிகரித்து அதனால் தேவைக்கதிகமான சேமிப்பு ஏற்பட்டது.

இங்கு அதிக உற்பத்தியை பெற்றவர்கள் ஆண்களே. காரணம் பெண்களால் அதிக நேர-உற்பத்தியில் ஈடுபட முடியாமல் குழந்தைப் பராமரிப்பு, வீட்டு வேலைகள் என்பவற்றில் அவர்கள் முழுமையாக ஈடுபடவேண்டியிருந்தது.

இந்நிலையில் அதிக உற்பத்தியில் ஈடுபடும் ஆண்களுக்கும், குறைந்த உற்பத்தியில் ஈடுபடும் பெண்களுக்கும் இடையில் சமமற்ற வாழ்வு முறை தோன்றியது

தங்களது மேலதிக சேமிப்புகள் தங்கள் வாரிசுகளுக்கே உரித்தாக வேண்டும் என்பதற்-காக ஆண்கள் பெண்களை வாரிசு உற்பத்திக்கும், வாரிசுகளைப் பராமரிப்பதற்கும் மட்டும் பயன்படுத்தத் தொடங்கினர். இதற்காகத் தங்களுக்கேற்ப சட்ட திட்டங்களைப் போட்டுக் கொண்டனர்.

## கல்யாணி

பெண்களுக்கே உரியனஎன வரையறுக்கப்பட்டவைகளுக்காக பெண்கள் நிர்ப்பந்திக்கப்பட்டது டன் ஆரம்பமாகிய ஆதிக்கம் இன்று அரசுகளின் ஒத்துழைப்பு-டன் தொடர்ந்து கொண்டிருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப் பெண் அடக்குமுறையை இன்று பலர் உணர்ந்து அவற்றுக்கெதிராகக் குரல் கொடுப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. எனினும் ஆரம்ப காலம் தொட்டு ஒரு பாலாருக்கு சார்பாகவே ஏற்படுத்தப் பட்ட சடங்குகள், சம்பிரதாயங்கள், கலாச்சாரங்கள் என்பன இன்றும் பெண்ணடிமைத்தனத்தைப் பேணுவதில் முனைப்பாக இருப்பதையும் கண்டு கொள்ளலாம். இவற்றுக்கு உதாரணமாக பூப்புனித நீராட்டு விழாக்கள், தாலி கட்டல் என்பவற்றை உள்ளடக்கிய திருமணச் சடங்குகள், கலாச்சாரம் என்றாலே பெண்கள் சேலை அணிவதும், தலையில் பூச் சூடுவதும் என்று பலவற்றைக் குறிப்பிடலாம்.

பெண்களின் உடற்கூற்றியல் ரீதியாக ஏற்படுகின்ற ஒரு நிகழ்வை பெண் பெரியவளாகி விட்டாள் என்று விளம்பரம் செய்து கொண்டாடுகிறார்கள். இந் நிகழ்வின் பின் அப் பெண்ணை யாருடனும் சுதந்திரமாகப் பழகவோ பேசவோ அனுமதிக்காமல் வீட்டுக்குள்ளேயே வைத்து வீட்டு – வேலைகள், சமையல் வேலைகள் என்று பயிற்றுவிக்கின்றனர். திருமணத்தைத் தவிர அவள் வேறுஎதற்குமே தகுதியற்றவள் என்பது போல்.

பெண்களின் மனநிலை பற்றியோ, அவர்களின் விருப்பங்கள் பற்றியோ அவர்களின் பெற்றோர்களே கவலைப்படாததும் இங்கு முக்கியமான அம்சமாகும். தங்கள் பெண் பிள்ளைகளை கண்டிப்பும், காவலுமாக தாங்கள் வளர்ப்பதற்குப் பெற்றோர்கள் – சொல்லும் காரணம் அவள் திருமணம் செய்து போனபின் புகுந்த வீட்டில் நல்ல பெயரைச் – சம்பாதிக்க வேண்டும் என்பதாகும்.

அடுத்தபடியாக தாலிகட்டலைப் பார்ப்போம். திருமணம் என்றால் என்ன? தாலி என்றால் என்ன? இரண்டுக்கும் என்ன சம்பந்தம்?

திருமணம் என்பது இருஉள்ளங்களின் புரிந்துணர்வினால் ஒருவரையொருவர் விரும்பி தமக்கென்று ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்வதற்காக சட்டப்படி செய்கின்ற நடவடிக்கையாகும்.

தம் பெண்ணுக்கு தாம் விரும்பிய மாப்பிள்ளையை பணம் கொடுத்து வாங்கி, தம் வசதிக்கும் மேலாகச் செலவழித்து, பெருங் கூட்டத்தையும் அழைத்து விருந்து படைத்து, பெண்ணை பட்டாலும், பவுனாலும் மறைத்து, தலையைக் குனிய வைத்து, விளங்காத பல சடங்குகளின் பின் தாலியைக் கட்ட வைப்பதுதான் திருமணம் என்று பெற்றோரும், மற்றோரும் கருதுகிறார்கள். இங்கும் பெண்ணின் விருப்பு, வெறுப்போ, அபிப்பிராயங்களோ இவர்களுக்கு முக்கியமானவையல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்களின் கழுத்தில் தாலியை ஏன் கட்டுகிறார்கள் என அவதானிக்கும்போது அவள் அடிமைதான் என அறிவுறுத்திக்கொண்டிருப்பதற்காகவே என எண்ணத்தோன்றுகிறது.

ஆரம்பத்தில் மஞ்சள்நூலில் மஞ்சள் துண்டையும், மஞ்சள் நூலில் ஒரு முடிச்சையும் முடிந்து வந்த சமூகம் காலப்போக்கில் 10 பவுணில் தாலியையும் கொடியையும் செய்து பெண்களின் கழுத்தில் அணுவிப்பதன் மூலம் இவர்களின் சிந்தனையையும் மழுங்கடித்து, இந்த அடிமைநிலையையும் பேணுகிறது.

போதாக்குறைக்கு பெண்களையும் பட்டு, பவுண் ஆசைகள் பிடித்துவிடுகின்றன. இதனைப் புரிந்துகொண்ட சமுதாயமும் தனது அமைப்புமுறையைப் பாதுகாத்துக் கொள்ள இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறது.

வேலை செய்கின்ற, படிக்கின்ற பெண்கள் தங்கள் வேலையையோ, படிப்பையோ முடித்து வீடு திரும்பும்போது வீட்டு - வேலைகள் காத்துக் கிடக்கின்றன.

ஆனால் இதேபோல் ஆண்கள் படிப்பையோ, வேலையையோ முடித்து வீடு திரும்பும்போது அவர்களுக்கென்று எந்த வீட்டுவேலைகளும் காத்திருப்பதில்லை. ஏனெனில் அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டியிருப்பது பெண்கள்தானே!

வீட்டு வேலைகளின் இந்த சமமின்மை தவிர்க்க முடியாததல்ல. புரிந்துணர்வும், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கும் இருக்கையில் இவைகள் பிரச்சினைகளாக இருக்க மாட்டா.

ஆனால் பல பெண்கள்இவை தங்களுடைய கடமை என்றும், தலைவிதி என்றும் தமக்குள்ளே- நொந்துகொண்டோ அல்லது சகித்துக்கொண்டோ தம் உடல் நிலையையும் கவனியாமல் மௌனமாகவே இருந்துவிடுகின்றனர். இந்த மௌனம் கூட இவர்களின் 'வேலைக்கார' நிலையைப் - பேணுவதற்குக் காரணமாகிறது.

பெற்றோர்கள் தம் பிள்ளைகளை வளர்க்கும்போதே - ஆண் குழந்தையை நீ நன்றாகப்- படி, வீரனாக வா, பலசாலி, எல்லோரையும் காப்பாற்றக் கூடியவன், வல்லமை படைத்தவன்என்றும், பெண் குழந்தையை ஆண்பிள்ளைகள் போல் கதைக்காதே திரும்பியடிக்காதே, அடக்கமாக இரு, எதிர்த்துப் பேசாதே, வெளியே போகாதே என்றும் சொல்லியே வளர்க்கிறார்கள்.

இந்த வளர்ப்பு முறைகூட அடிமைப்படுத்த ஆணும், அடிமையாகப் பெண்ணும் ஒரு வீட்டுக்குள்ளேயே வளர வழி செய்கிறது. சின்ன வயதில் பிள்ளைகளுக்கு போதிக்கின்ற கருத்துகள் மிக ஆழமாகப் பதியக் கூடியவை. பின்னர் இவற்றை மாற்றுவது கடினம் ஆகும். இம் முறையில் வள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ர்ந்த பிள்ளைகளின் மனோநிலையும் சுலபத்தில் மாற்றக் கூடியதல்ல. இந்த மனோநிலையும் கூட பல பெண்கள் தம் அடிமைநிலை பற்றிச் சிந்திக்க முடியாமலிருப்பதற்கான காரணிகளில் ஒன்றாகிறது.

இவற்றையும் மீறி ஒருபெண் தனது சுய சிந்தனையில் செயற்பட முயலும்போது பெற்றோர்களாலும், சமுதாயத்தாலும் – மிகச் சாதுரியமாகத் தடுக்கப்பட்டு மீண்டும் ஒடுக்கப்படுகிறாள்

ஆட்டக்காரி, அடக்கமில்–லாதவள், நடத்தை சரியில்லாதவள் போன்ற கேவலமான வார்த்தைப் பிரயோகங்களை தாங்கிக்கொள்ள முடியாததாலும் பெண்களில் பலர் தாமும் நல்ல மகளாக, மனைவியாக, தாயாக வாழ்வதாக நினைத்து அடிமை நிலையைப் பெருமையாக்கிக் – கொள்கின்றனர்.

ஆணுக்குப் பெண் எந்த நிலையிலும் குறைந்தவளல்ல. மனோதிடத்திலும், உடல் பலத்திலும் கூட நிகரானவளே. ஆனால் இவர்களின் வளர்ப்பு முறையில்உள்ள வேறொரு அம்சமும் இவர்களைப் பலவீனப்படுத்திவிடுகிறது.

பெண்களுக்கு மட்டும் அழகுணர்வில் அக்கறையூட்டி உண்டி சுருங்குதல் பெண்டிற்கழகு, கொடியிடையாள், மெல்லிடையாள் – போன்ற சொற்பிரயோகங்கள் மூலம் ஈர்க்கப்பட்டு உணவு குறைக்கப்பட்டு பலம் குறைக்கப்படுகிறது. தவிர அவர்களின் மனமும் வேறு விடயங்களில் ஈர்க்கப்பட்டு கவனங்கள் திசை திருப்பப்படுகின்றன.



(வெளிநாட்டு அகதிகள் விடுதி ஒன்றில்)

"என்ன இண்டைக்குப் பாத்திரங்கள் கழுவேக்க சந்தோசமாயிருக்கிறாய்? வழக்கமாய் எரிஞ்சுகொண்டிருப்பாய்?"

"ஊரில கலியாணம் பேசி மனிசி பிளைற் எறியிட்டா. இனி இந்த வேலையள் எனக்கில்லைத்தானே?"

– [illegible].

வெளிவேலைகளில் கூட ஆண்களைப் போலத்தான் பெண்களும் வேலை செய்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் ஏன் அதிகமாகவே ஆணைவிட பெண்கள்தான் அதிக உழைப்பில் ஈடுபடுகிறார்கள். ஆனால் அவளின் கூலி ஆணைவிடக் குறைவானதே. வீட்டுவேலைகளில் கூலிக் கணக்கிடப்படாதது வேறு விடயம். இதனை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல பெண்கள் கண்டுகொள்வதுமில்லை. எதிர்ப்பதுமில்லை. காரணம் தாம் ஆண்களைவிடப் பலம் குறைந்தவர்கள், கூடுதலான வேலையை எம்மால் செய்ய முடியாது என்ற தாழ்வுமனப்பான்மையேதான். இந்த நிலையில்இவர்கள் உழைப்பும் சுரண்டப்பட்டு கூலியும் குறைவடைகிறது.

இங்கே இன்னும் ஒன்றையும் நாம் அவதானிக்க வேண்டும். ஆண்களின் உழைப்பும் சுரண்டப்பட்டுக் கொண்டிருப்பது உண்மையே. இதைவிட மிக மோசமாகவே பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதற்கெதிராக, ஆண் தொழிலாளிகள் மட்டும் குரல் கொடுப்பதைவிட ஆண், பெண் தொழிலாளிகள் இணைந்து போராடுவதே அவசியமானது.

பெண்களுக்கெதிரான வன்முறைகளையும் குறிப்பாக பாலியல் வன்முறைகளையும் கவனத்திலெடுக்காமலிருக்க முடியாது. இந்த நிலையில் பெண்கள் தனியாகச் செல்வதோ, இரவுநேர வேலைகளில் ஈடுபடுவதையோ தவிர்த்துக்கொள்ள வேண்டியுள்ளது. காரணம் ஆண்கள் தமது விருப்பப்படி மட்டுமே ஒரு பெண் மீது பிரயோகிக்கின்ற பலாத்காரமானது பெண்களை மிகவும் மோசமாகப் பாதிப்பதை - சொல்லித் தெரியத் தேவையில்லை.

இப்படியான வெறித்தனம் நிரம்பிய பாலியல் வன்முறைகளினால் அடைந்த சித்திரவதைகளைவிட தங்கள் வாழ்வையே பறிக்கக்கூடிய சமுதாய ஒதுக்கலையும் இவர்கள் சந்திக்க வேண்டியிருக்கிறது.

பாதிக்கப்பட்ட பெண்களைத் தற்கொலைக்குத் தூண்டும் இச் சமூகம் குற்றவாளியான ஆணை எந்தவிதத்திலும் தண்டிப்பபதற்குப் பதிலாக அவனுக்கு ஊக்கமளிப்பதாக ஆம்பிளைகள் அப்படித்தான் என்று தட்டிக்கொடுக்கிறது.

இந்தக் கண்மூடித்தனமான பக்கச் சார்பான முடிவுகள் மூலம் பெண்கள் தமக்கு இழைக்கப்படும் அநியாயத்தை உணர்ந்தும்கூட அவற்றுக்கெதிராகச் செயற்படத் தயங்குகிறார்கள். பலர் கண்ணீர் வடிப்பதுடன் நின்று விடுகிறார்கள்.

அடுத்தாகப் பெண்களை மட்டுமல்ல அவர்களுடன் சேர்த்து ஆண்களையும் பாதித்துக்கொண்டிருப்பது சீதனப் பிரச்சினையாகும். தங்கள் பெண்பிள்ளைகளுக்கு கல்வியைத் தொடர அனுமதிக்காமை, தொழிற் பயிற்சி - பெற அனுமதிக்காமை, அவர்கள் தங்கள் சொந்தக் காலில் வாழக் கூடியதாக பயிற்றுவிக்காமை போன்றன கூட சீதனப்பிரச்சினையால் இன்றும் பலர் பாதிக்கப்படுவதற்கு ஏதுவாகின்றன.

எமது வாழ்க்கையை நாங்களே தெரிவு செய்ய வேண்டும். எம் பிரச்சினைகளுக்கு நாங்களே முடிவு தேட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிழையான கருத்துகள், கட்டுப்பாடுகள் திருத்தப்பட வேண்டும். தகர்க்கப்பட வேண்டும்.


சமூக, பொருளாதார, அரசியல் அபிவிருத்தியில் பெண்களை இணைத்துக் கொள்ளவிடாமல் தமது நலன்களைக் காப்பாற்றிக் கொள்ளும் இச் சமூக அமைப்பை மாற்றிக்கொள்ள பெண்களும் ஆண்களும் இணைந்துபோராட வேண்டும்.

இதற்கான இணைப்பாக கண்மூடித்தனமான மூட நம்பிக்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், கட்டுப்பாடுகளையும் எதிர்க்க வேண்டும். பெண் ஒடுக்குமுறையும், சுரண்டலும் சட்டங்களினாலோ, தனியே சீர்திருத்தங்களினாலோ மட்டும் தீர்க்கப்படக்கூடியவையல்ல. எனவே இதற்கான சரியான தீர்வைத் தேடும் தேடலில் ஆண்களும், பெண்களும் தங்களை இணைத்துக்கொள்ளவேண்டும்.

6வது இலக்கியச் சந்திப்பில் இக்கட்டுரையாளரால் வாசிக்கப்பட்ட கட்டுரை சில மாற்றங்களுடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது.



# நூல் அறிமுகம்



## தேடல்

தொடர்புகளுக்கு:

**THEDAL**

O.P.A.L.

B.P NO:166

92805 PUTEAUX CEDEX

FRANCE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தென்னிலங்கையில் இலங்கையரசின் கொலைவெறியாட்டம்.

ஜே.வி.பி.யின் தலைவர்கள், உப. தலைவர்களைக் கபடமாக இராணுவத்தின் மூலம் கொன்ற இலங்கையரசு, தீவிரவாத இயக்கங்களில் மீண்டும் இளைஞர்கள் சேர்ந்து கொள்வதைத் தடுப்பதற்காக ஜே.வி.பி. தலைவர்களின் ஆடம்பர வாழ்க்கையென்று புனைகதைகளையும், புளுகுகளையும் அவிழ்த்துவிட்டுள்ளது. இயக்கத் தலைவர்கள் எல்லோரும் இப்படித்தான் மக்களை ஏமாற்றி வருகிறார்கள் என்ற கருத்தைப் பரப்ப முயற்சித்து வருகிறது. "எங்களின் வாழ்க்கைமுறைகளை மக்கள் அறிந்தால் எங்களுடைய தொகுதிகளுக்கே எங்களால் போக முடியாமலிருக்கும்" என்று அமைச்சர் ஒருவரே உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டினாலும் இலங்கையரசு அவற்றை புறக்கணித்து "நாங்கள் வென்றுவிட்டோம், ஜே.வி.பி.யுடனான ஆட்டம் முடிந்துவிட்டது" என்று ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தெற்கில் ஜே.வி.பி. 'அழிக்கப்பட்டதால்' அங்கு 'கடமை'யில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இராணுவம், பொலிஸ், அதிரடி பட்டாளங்களை 'மீண்டும்' தமிழ்ப் பகுதிகளுக்கு அவர்களின் 'கடமை'யைத் தொடர இலங்கையரசு அனுப்பி வைத்துள்ளது. இவர்கள் தற்போது கிழக்கு மாகாணத்திலும், வன்னிப் பகுதிகளிலும் வந்து குவிந்துள்ளனர்.

இந்தப் பகுதிகளில் இந்திய அரசின் ஒத்துழைப்புடன்உருவாக்கப்பட்ட ரி.என்.ஏ. என்ற தமிழ்த் தேசிய இராணுவம் இலங்கைப்படை முகாம்களைத் தாக்கியபோது எல்.ரி.ரி.ஈ அத்தாக்குதல்களை முறியடித்ததுடன் ரி.என்.ஏ.யைத் தாக்கி அழித்து இலங்கைப் படைகளைக் 'காப்பாற்றியுள்ளது'.

அத்துடன் "தமிழ் இயக்கங்களை இலங்கைப் படைகள் தாக்கினால் இலங்கையரசுக்குத்தான் கெட்ட பெயர். அதனால் அந்த

www.tamilarangam.net

இயக்கங்களை அழிக்கும் பொறுப்புகளை நாங்களே ஏற்றுக் கொள்கிறோம். இலங்கைப் படைகள் இதில் தலையிட வேண்டாம்" என்று எல்.ரி.ரி.ஈ அறிவித்திருப்பதும் இலங்கையரசுக்குப் 'பலம்' சேர்த்துள்ளது.

"இலங்கைப் படைகள் செய்ய வேண்டியதை எல்.ரி.ரி ஈ. இலங்கையரசுக்குக்காகச் செய்து கொண்டிருக்கிறது" என இலங்கையரசின் பாதுகாப்பமைச்சரே எல்.ரி.ரி.ஈ.க்கு 'நற்சான்றிதழ்' வழங்கியிருக்கிறார்.

இப்படி அனைத்து வழிகளிலும் தமிழ்ப் பகுதிகளில் தனக்குச் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்திவரும் இலங்கையரசு தென்பகுதிகளுக்கு மீண்டும் இலங்கைப் படைகளை வருவிப்பதை 'தவிர்ப்பதற்கு' தனது இரகசியப் படைகளை அப்பாவி மக்கள்மீது ஏவி கொலை வெறியாட்டம் போடுகிறது.

1971இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில்நடைபெற்ற ஜே.வி.பி 'கிளர்ச்சி'யை அடக்க இந்திய அரசினால் வழங்கப்பட்ட இராணுவ உதவியுடன் குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்ட சிங்களஇளைஞர்களை சிறிமாவோ படுகொலை செய்து குவித்ததை போலவே இன்று ஆளும் கட்சியைச் சேர்ந்த பிரேமா தனது இரகசியக் கொலைப் பட்டாளங்கள் மூலம் அப்பாவி மக்களைக் கொன்றுகுவித்து வருகிறார். குறிப்பாக வறிய, உழைக்கும் குடும்பங்களைச்சேர்ந்தவர்களையே வீதிகளில் ரயர் போட்டு கொளுத்திக் கொல்கிறது. கால்கள், கண்களைக் கட்டி சுட்டுக் கொல்கிறது. கைது செய்யப்படுபவர்கள் தொடர்ந்து 'காணமற்' போகிறார்கள்.

சமாதான வேடம் போட்டு நாடகமாடும் இலங்கையரசு தனது கோரப் பற்களை தனது இன மக்கள் மீதே வெறித்தனமாகப் பதித்து வருகிறது. தன் நாட்டு மக்களுக்கெதிராகப் போர் புரிவதற்கென ஆயுதக் கொள்வனவுக்கும், இராணுவப் பயிற்சிக்கும் என அரச நிதியைச் செலவழித்தும், வெளிநாடுகளில் கடன்களை வாங்கிக்கொண்டும் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு போகிறது. "கடன் வாங்குவதில் வெட்கப்படுவதற்கு எதுவுமில்லை" எனஆளும் கட்சியின் அமைச்சர் பாராளுமன்றத்தில் கூறி நாட்டை ஏகாதிபத்தியங்களுக்கு அடகு வைத்ததை நியாயப்படுத்தியுள்ளார்.

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் திசை திருப்புவதற்காக இனவாதத்தை வளர்த்து தன்னை நிலைநிறுத்திவந்த இலங்கையின் ஆளும் கட்சிகள் தங்களால் மழுங்கடிக்கப்பட்ட பிரச்சினைகளே இன்று விசுவரூபம் எடுத்து நிற்கையில் கொலை வெறியுடன் அவற்றை அடக்க முயற்சிக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் இன்று ஆளும் கட்சிகளால் தொடர்ந்து ஏமாற்றப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும் வந்த அடித்தட்டு மக்கள் விரக்தியடைந்து ஆயுதங்களை ஏந்திவிட்டார்கள்.

இந்த மக்களின் போர்க் குணம்சத்தை, அரசுக்கெதிரான தீவிரத்தை இனவாதக் குழுவான ஜே.வி.பி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. பாதிக்கப்பட்ட மக்களைச் சரியான பாதையில் செல்லவிடாமல் தடுத்து அவர்களுக்கு ஆயுதக் கவர்ச்சியூட்டியும், பயமுறுத்தியும் தனது கொலைத் தொழிலுக்குப் 'பயன்படுத்தி' வந்தது.

1983 ஜூலை இனக்கலவரத்தினுல் பாதிக்கப்பட்டதமிழர்களின் உணர்ச்சிகளைப் பயன்படுத்தி, அவர்களை உள்வாங்கி தமிழ் இயக்கங்கள் 'வீக்கமடைந்து', தலைமைகளை தக்க வைத்துக்கொண்டதைப்போல், போராளிகளை வைத்துக்கொண்டு இராணுவவாதத்தைக் கட்டிக் காத்ததைப் போல் ஜே.வி.பி விரக்தியடைந்த மக்களை தன் பக்கம் இழுத்து அவர்களை ஆயுதபாணிகளாக்கி பயங்கரவாதத்தைச் செயற்படுத்தி வந்தது.

இன்று ஆயுதக் கவர்ச்சிகள் ஓரளவேனும் நீங்கி சரியான மார்க்கத்தைத் தேடும் தேடலில், தமிழ் இயக்கங்களின் அராஜகங்களுக்கெதிராகவும், அரச பயங்கரவாதத்திற்கெதிராகவும் வடக்கு, கிழக்கில் குரல்கள் ஒலிக்கத் தொடங்கியிருப்பதைப் போல ஜே.வி.பி.யின் இனவாதத்தையும், பயங்கரவாதத்தையும் புரிந்துகொண்டு அவற்றுக்கெதிராக சிங்கள மக்கள் குரல்கள் கொடுக்கத் தொடங்கியுள்ளார்கள். இந்தக் குரல்கள் இணைந்து பலம் பெறும்போது மனிதம் நிலைநாட்டப்படும்.

| | |
|---|---|
| கலம் 24இலும், இக் கலத்திலும் பிரசுரமாகியுள்ள துணுக்குகளுக்கான சித்திரங்கள் ஆனந்தவிகடன், குமுதம் சஞ்சிகைகளிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். | 6ஆவது இலக்கியச் சந்திப்புப் பற்றியும் புலப்பெயர்வு பற்றியும் அடுத்த கலத்தில் ஒரு ஜேர்மெனியர் எழுதுகிறர். |

www.tamilarangam.net

சிறுகதை

# ஓய்வும், உழைப்பும்:

ஒரு பார்வை.

---

இரண்டாம் உலகமகா யுத்தத்திற்குப் பின்னர் எழுந்த ஜேர்மென் மொழி இலக்கியத்தில், தலை சிறந்த எழுத்தாளராகத் திகழ்பவர் கைன்றிச் பொல். 1972இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற பொல், 1947இல் எழுத்துத்துறைக்குப் புகுந்தவர். மேற்கு ஜேர்மெனியின் புதிய முதலாளித்துவக் கலாச்சாரம், இனவாதம், நிறவாதம் என்பவற்றுக்கு எதிராகவும், இந்நாட்டின் சகலவற்றையும் கேள்விக்குறியாக்கித் தீவிரமாக எழுதிய இவர் இங்குள்ள போராட்டக் குழுக்களுக்கு தனது ஆதரவைத் தந்து கொண்டிருந்தார்.

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள கைன்றிச் பொல்லின் சிறுகதை 'டஸ் கைன்றிச் பொல் - லே புக்' என்ற தொகுப்பிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் தொகுப்பு வெளியிடப்பட்ட ஆண்டு 1963.

---

மேற்கு ஐரோப்பியக்கடற்கரையில் ஒரு துறைமுகம். கடலில் அசைந்தாடும், கரையோடு இணைக்கப்பட்டிருக்கும் படகொன்றினுள் ஏழ்மையாக உடையணிந்திருந்த ஒருவன் சாய்ந்திருந்தான்.

சிவப்புக் குல்லா போட்டிருந்த அந்த மீனவன் சாவகாசமாக இருந்து எதிலோ மூழ்கியிருந்தான்.

உடையலங்காரத்திலிருந்து உல்லாசப் பயணி எனக் கண்டு கொள்ளக் கூடிய ஒருவன் மீனவன் சாய்ந்திருந்த படகை அண்மித்ததும் தனது நடையை நிறுத்திக் கொண்டான்.

அந்தக் காட்சி அவனைக் கவர்ந்திருந்தது.

விரைந்து தனது கமறுவில் பிலிம் சுருளை மாட்டினான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீலவானம்...

அமைதியான வெண்பனி - அலை தழுவும் கடற்பரப்பு.

கருநிறமான படகு..

சிவப்புக் குல்லா...

எதிலோ ஆழ்ந்து போயிருக்கும் மீனவன்...

க்கிளிக்! க்கிளிக்!!

தரமானதையும், திறமானதையும் தேர்வு செய்வதற்கு இரண்டு போதாதே. அதனால்..

மீண்டும் க்கிளிக்!

உல்லாசப் பயணியின் கமரா அவரசரமாக பல க்கிளிக்குகளைச் செய்து கொண்டது.

சொற்களற்ற சம்பிரதாயங்கள் முடிவடைய தங்களுக்கிடையே பாலமாக உல்லாசப்பயணியே உரையாடலை ஆரம்பித்துவைத்தான்.

"இன்று நல்ல மீன்படுமா?"

"ம்.. ம்.."

"இப்படியான காலநிலைக்கு கூடுதலாக மீன் படும் என கேள்விப்பட்டிருக்கிறேன்"

---

மூலம்:

HEINRICH BÖLL

தமிழில்:

ந. சுசீந்திரன்

---

முற்றிலும் அந்நியமானஇந்தச் சத்தம் அரைத் தூக்கத்தில் தன்னுடைய சுருட்டுப் பெட்டியைத் தடவிக் கொண்டிருந்த மீனவனை விழிப்படைய வைத்து.

அவனுடைய கைகளில் அந்தச் சுருட்டுப்பெட்டி சிக்குவதற்கிடையில்...

தன்னுடைய உயர்ரக சிகரெட் பெட்டியைத் திறந்து மீனவனின் முகத்தின் நேராக நீட்டினன் அந்த உல்லாசப் பயணி.

மீனவன் சிகரெட்டைக்கையிலெடுக்கும்போதும், நெருப்பு பற்ற வைத்துக் கொள்ளும்போதும்...

"ம்.. ம்.."

"அப்போ நீங்கள் போகவில்லையா?"

"இல்லை" என்பதாகத் - தலையை ஆட்டுகிறான் மீனவன்.

அவனின் சுருக்கமான ஒட்டாத பதில்களால் உல்லாசப்பயணி சோர்வடைந்துவிட்டபோதும், எளிமையாக ஆடையணிந்திருந்த அந்த மீனவனின் பூரிப்பில் லயித்துவிட்டான்.

"ஏன்? இன்று உங்கள்உடல் நிலை சீரில்லையா?" மீனவனிடமிருந்து ஏதாவது பதிலைப் பெற்றுவிட வேண்டுமென்று உல்லாசப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பயணி விடாமல் முயற்சித்தான்.

இதுவரை தன் அசைவுகளையே மொழியாக்கிக் கொண்டிருந்த மீனவன் இப்போது பேச்சு மொழிக்குத் தயாராகிவிட்டான்.

"நான் நன்றாகத்தானே இருக்கிறேன். ஆம். என்றுமில்லாதளவு இன்று நன்றாகவே இருக்கிறேன்" என்று சொல்லியபடி கைகளை முன்னே கோர்த்துக்கொண்டு படுக்கை நிலையிலிருந்து எழுந்து.. நெட்டி முறித்து.... தன் உடல்வாகுக்கு ஒரு தரம் உருக்கொடுத்து ஓய்ந்து கொள்கிறான்.

"ஆமாம். உடல் மிக நன்றாகவே உள்ளது" மீனவன் மீண்டும் சொல்கிறான்.

உல்லாசப் பயணியின் முகத்தில் கவலை வரிகள் கோடிட ஒருவித சலனம். தன்னுடைய இதயத்திலிருந்து எழும்... இல்லை தன்னும் அந்தக் கேள்விகளை அடக்க அவனால் முடியவில்லை.

"அப்போ ஏன் நீங்கள் இன்று மீன் பிடிக்கப் போகவில்லை?" என்று கேட்டேவிட்டான்.

"காலையிலேயே போய் வந்துவிட்டேன்"

எதையும் சட்டை செய்யாமல் வெட்டிப் போட்டாற்ப் போல வந்தது அந்தப் பதில்.

"எப்படி? மீன் பட்டாதா?

"உம். திரும்பிப்போகத் தேவையற்ற அளவு நன்றாகவே பட்டது"

"என்னென்ன?"

"நான்கு சிங்க இறால், சுமாரான அளவு சூரை மீன்கள் வேறு சிறு மீன்கள்... இவை போதும்" என்று பெருமூச்செறிந்த மீனவன் உல்லாசப் பயணியின் விசனமடைந்த முகத்தை வேதனையோடு பார்த்து முதுகில் தட்டிக் கொடுத்தான்.

அந்த அந்நிய இதயம் தனக்காக வருந்துவதை அறிந்து அந்த வேதனையைத் தீர்ப்பதற்காக "எனக்கு இன்று மட்டும் அல்ல, நாளைக்கும், மறுநாளைக்குமாகக் கூட போதுமானளவு மீன்களைப் பிடித்துவிட்டேன்" எனத் தேற்றினான்.

"என்னுடைய சுருட்டில்ஒன்றை நீங்கள் புகைத்துப் பார்க்கலாமே" தனது சுருட்டுப் பெட்டியைத் திறந்து ஒரு சுருட்டை எடுத்து நீட்டினான் மீனவன்.


"தாராளமாக. நன்றி" உல்லாசப் பயணி அந்தச் சுருட்டை வாங்கி வாயில் பொருத்திக் கொண்டு, ஐந்தாவது தடவையாகவும் கமறாவைக் 'க்கிளிக்' கிறான். பின் கமறாவைக் கழுத்திலிருந்து அகற்றி அணியத்தில் வைத்துவிட்டு கால்களை நன்றாக நீட்டி, வசதியாக உட்கார்ந்து கொண்டான்

மீனவன் அவன் சொல்லப் போவதை எதிர்பார்த்து அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"அங்க என்ன செய்யினம்?"

"ஏஜென்சிக்காறன் ஒருதன் தான் யூரோப்புக்கு அனுப்பி வைச்ச ஆக்களை திருப்பி ஏத்திக்கொண்டு வந்த நூறாவது பிளேற்றுக்கு கொடி கட்டுறான்"

"இது உங்களின் சொந்த பிரச்சினை. இதில் நான் சொல்ல என்ன இருக்கிறது? இருந்தும் என்றால் சொல்லாமலும் இருக்க முடியவில்லை. இங்கே பாருங்கள் இன்று திரும்ப ஒருதரம், இன்னும் ஒருதரம், மீண்டும் ஒருதரம் என்று ஐந்தோ ஆறு தடவைகள் கடலுக்குப் போய் வந்தீர்கள் என்று வைத்துக் கொள்வோம். ஒரு ஆறு குவியலோ இல்லை அதை விடக் கூடுதலாக கூட மீன்கள் வந்து சேராதா?"

உல்லாசப் பயணி சொன்னதை ஆமோதிப்பது போல மீனவன் தலையை முன்பக்கமாக ஆட்டினான்.

தன்னுடைய ஆலோசனை அவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதாகக் கருதிக்கொண்ட உல்லாசப் பயணி மறுபடி தொடர்ந்தான்.

"நீங்கள் இன்றும் நாளையும், நாளை மறுநாளும், தொடர்ந்து பத்து நாட்களுக்கு, இந்த பருவகாலம் மாறும்வரை இப்படியே நான்கு, ஐந்து தடவைகள் கடலுக்குப் போய்வந்தால் என்ன நடக்கும் தெரியுமா?" என்று கேட்டு நிறுத்தினான் உல்லாசப்பயணி.

அவனிடம் புதிதாக எதையோ அறிந்து கொள்ளும் பாவனையில் தெரியாதவன் போல் தலையாட்டிவிட்டு அவனையே — பார்த்துக்கொண்டிருந்தான் மீனவன்.

"ஒரு வருடத்தில் மோட்டார், குறைந்தது இன்னொரு இரண்டு வருடங்களில் இன்னொரு படகு, குறைந்தது நாலு வருடங்களில் ஒரு இழுவைப் படகு என்று சேர்ந்துவிடும். பிறகென்ன? இவற்றைக் கொண்டு மேலும் பெருந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொகையான மீன்களைப் பிடிக்கலாம். இவற்றை விற்று எப்படியும் குறுகிய காலத்தில் இரண்டு ரோலர்கள் வாங்கிவிடலாம் பிறகு..." உல்லாசப் பயணியின் அவசரமான எதிர்காலம் பற்றிய கற்பனைகள் வார்த்தைகளைத் தடைப்படுத்தப் பார்க்கின்றன. எனினும் அவன் தொடர்ந்தான்.

"எப்படியோ ஒரு சிறிய ஐஸ் தொழிற்சாலையைக் கட்டி முடிக்கலாம். அதைத் தொடர்ந்து ஒரு பதனிடும் தொழிற்சாலையைக் கட்டுவது சிரமமில்லை பிறகென்ன, கெலிக்கொப்ரரில் பறந்தபடியே மீன் பாடுள்ள இடங்களைப் பற்றி வயர்லெஸ் மூலம் ரோலர்களுக்கு அறிவித்துக்கொண்டிருக்கலாம்.

மீன்கள் பெருமளவில் எஞ்சினால் அருகிலுள்ள உணவு விடுதிகளுக்குக் கொடுத்து விடலாம். சிங்கப்பூர் மற்றும் இலண்டன், பரிஸ் போன்ற நாடுகளுக்கு அனுப்பிப் பார்க்கலாம்"

புளகாங்கிதமும், பரிச்சயமின்மையும் உல்லாசப் பயணியை சரளமாக உரையாடவிடாமல் தடுத்துக் கொண்டிருந்தன.

தன்னுடைய உல்லாசப்பயணச் சுகங்கள் யாவும் அழிந்துவிட்டதைப் போன்ற உணர்வுடன், கரையைத் தழுவ அமைதியாக வரும் அலைகளின் மீது அவனின் பார்வை குத்திட்டு நின்றது.

மீன்கள் நீர் மட்டத்தின்மேல் துள்ளி எழுவதும்.. மறைவதும்.., மறுபடி துள்ளி எழுவதுமாய்...

கண்களில் மறுபடியும் விரிந்த கனவுலகம் உல்லாசப் பயணியைத் தொடர்ந்து பேசத்தூண்டியது. ஆனால் வார்த்தைகள் சிக்கிக் கொண்டன.

அந்த அவஸ்தையை நீக்கிவிடும் போக்கில் அவனின் முதுகில் மென் சிரிப்போடு மெதுவாகத் தட்டிக் கொடுத்த மீனவன் "ம்.. பிறகு" என்று ஊக்குவித்தான்.

"எல்லா வசதிகளும்கிடைத்த பிறகு மிக அமைதியான அந்த எதிர் காலத்தை... இந்த அருமையான சூரிய கிரகணங்கள்.... இந்தப் பரந்த நீலக் கடலின் அழகு.. எல்லாவற்றையும் எவ்வாறு ரசிக்கலாம் தெரியுமா?" உல்லாசப் பயணி கண்களை மூடி ரசித்தான்.

"இப்போதும் நான்அதைத்தான் செய்கிறேன்" மீனவன் நிதானமாகக் கூறினான்.

உல்லாசப் பயணி கண்களைத் திறந்தான். கனவுலகம் சட்டெனக் கரைந்துவிட, மீனவனையே உற்றுப் பார்த்தான்.

"நீங்கள் சொன்ன எல்லாவற்றையும், அவற்றை விடக் கூடுதலாகவும் ரசித்துக் கொண்டும், சந்தோசமாகவும் தான் இருக்கிறேன். உங்கள் கமறாவின் க்கிளிக் சத்தம்தான் என்னைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொந்தரவு செய்துவிட்டது " மீனவன் சிரித்தபடி சொன்னான்.

இப்போதுதான் எதையோ பிடித்துக்கொண்டு விட்டதைப் போல உல்லாசப் பயணி உணர்ந்தான். தன்னையே மீள் பார்வை செய்து பார்த்தான்.

என்றோ ஒருநாள் வேலை செய்யத் தேவையில்லை என்ற எதிர்பார்ப்போடு, நம்பிக்கையுடன் இப்போது வேலை வேலை என்று மூழ்கிப் போயிருக்கும், இயந்திரமாக இருக்கும் தன்நிலையை எண்ணிப் பார்த்தான்.

ஏழ்மையாக உடையணிந்து படகில் சாவகாசமாக சாய்ந்திருந்து இயற்கையை அனுபவித்துக் கொண்டிருக்கும் அந்த மீனவனை இப்போது பார்க்கையில் உல்லாசப் பயணிக்கு அநுதாபம் பிறக்கவில்லை. பொறாமையுணர்வு தான் ஏற்பட்டது.

சில நடைமுறைப் பிரச்சினைகளால் இக் கலம் தாமதாமாக வெளிவருவதையிட்டு வருந்துகிறோம்.

— கடலோடிகள்.



வாசகர் கடிதங்கள்

சி.பாலனின் 'நான் ஏன் அழவேண்டும்?' என்ற சிறுகதையை இரண்டு வாசகர்கள் விமர்சித்துள்ளார்கள். இக் கதையை பிரசுரம் செய்ததால் இவ்விமர்சனங்களுக்கான எமது கருத்தையும் தெரிவிக்கவேண்டும்.

நாற்பது வயதுவரை ஒரு பெண்ணின் உணர்வுகளைப் பொருட்படுத்தாது, புறக்காரணிகளால் சமூகம் அவளை ஒதுக்கி வைத்திருப்பதையும், இதனால் தன்மீது பிரயோகிக்கப்பட்ட பாலியல் பலாத்காரத்தை எப்படிப் பார்க்கலாம் என அப்பெண் தடுமாறுவதாகவுமே அச் சிறுகதை சித்தரிக்கிறது. தவிர இராணுவத்தின் பாலியல் வன்முறையை நியாயப்படுத்துவதாகவோ, தன் மீது விழுந்தது சந்தனக் குழம்புதான் என்று அப்பெண் திட்டவட்டமாகக் கூறுவதாகவோ, பெண்களை கொச்சைப்படுத்துவதாக அமையும் கருத்துகள் எதுவும் அக்கதையில் இடம்பெறவில்லை.

மா.கு என்ற வாசகர் 'வடக்கு, கிழக்கில் குறிப்பாக வடக்கில் அங்கு வாழும் தமிழ் மக்களால் நிர்ணயிக்கப்படும் அரசாங்கத்துப்படைகள் அன்றி சிறிலங்கா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசின் காவற்படைகள் தங்கள் கடைமைகளைச் செய்ய முடியாது என்பது அனைவரும் அறிந்த உண்மை எனக் குறிப்பிட்டுள்ளார்.

உண்மை அதுவல்ல. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் (குறிப்பாக வடக்கில் மட்டுமல்ல ஏனைய பகுதிகளிலும் மக்கள் வாழுகிறார்கள்.) வாழும் மக்களால் தெரிவு செய்யப்படாமல், இந்திய அரசின் உதவியுடன் 'உருவாக்கப்பட்டிருக்கும்' மாகாணசபையின் பூரண 'ஒத்துழைப்புடன்' தான் இந்திய இராணுவம் இப் பகுதிகளில் கொலைகள், கொள்ளைகள், பாலியல் பலாத்காரங்கள் என்று தமது 'கடைமை'களைச் செய்தார்கள். அவர்கள் இந்தப் பகுதிகளைவிட்டு வெளியேறியதும் மீண்டும் தங்கள் 'கடைமைகளை' தொடர இலங்கை இராணுவமும். பொலிசும் எல்.ரி.ரி.ஈ.யால் அழைத்துவரப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழீழப் போராட்டத்தை 'முன்னர்' முன்னெடுத்த இயக்கங்களின் தன்னிச்சைப் போக்குகளும், அராஜகங்களும், துரோகத்தனங்களும் தொடரும்வரை சிறிலங்கா அரசின் காவற்படைகள் மட்டுமென்ன ஏகாதிபத்தியங்களின் ஏவற்படைகள் கூட தங்கள் 'கடைமைகளை' இலங்கையில் செய்வதை தடுத்துவிடமுடியாது.

தமிழ்த் தேசிய இராணுவத்திற்கு இந்திய இராணுவத்தினூடாக இந்தியஅரசு ஆதரவளிப்பதன் நோக்கம் அவ்வரசின் நலன்களையே சார்ந்தது. கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் மக்களின் படுகொலைகளில் இந்த ரி.என்.ஏ.தான் பெரும் பங்கு வகிக்கிறது என்பதிலிருந்து இவ்விராணுவம் ஏன் உருவாக்கப்பட்டிருக்கிறதென்பதை நீங்கள் இனம் கண்டு கொள்ளலாம். ஏகாதிபத்திய, முதலாளித்தவ அரசுகள் மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்ததாக எந்த வரலாறுமே இல்லை.

<u>கனவை மிதித்தவன்</u>

முன்பு சனங்கள் பாதையில் நடமாடினார்கள். இப்போது அநேகமாக பெண்களும், வயோதிபர்களுமே தெரிந்தார்கள் வரிகளிலிருந்து கதையை எழுதியவர் சனங்கள் என்ற பதத்துக்குள் பெண்கள், வயோதிபர்களை அடக்காது தவறையிழைத்துள்ளார்.




"என்ன இந்தப் பக்கம் இருந்தாப்போல அரசாங்கத்தின்ரை கெலிக்கொப்ரர் வருகுது?"

"அரசாங்கத்தோட சேந்திருக்கிற ஆரேன் இயக்கத் தலைவர் மார் வருகினமாக்கும்"

– கின்னரு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




01.12.89 (வீரகேசரி)

"அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இந்திய அமைதிப் படையினரது வெளியேற்றத்தைத் தொடர்ந்து இந்த2 மாவட்டங்களும் இலங்கை இராணுவம், பொலிசாரது கட்டுப்பாட்டினுள் வந்துள்ளன" –பாதுகாப்பமைச்சர்

தங்காலையில் தந்தையும், மகனும் கொல்லப்பட்டுள்ளனர்.

கட்டுவனையில் ஒரு ஆணும், ஒரு பெண்ணும், கொந்தெலியாவில் தாயும், மகனும் கொல்லப்பட்டுள்ளனர்.

04.12.89 (வீரகேசரி)

தங்காலையில் சூட்டுக் காயங்களுடன் 6 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

05.12.89 (வீரகேசரி)

திக்குவெலயில் துண்டிக்கப்பட்ட 5 மனித தலைகள் காணப்பட்டன.

07.12.89 (வீரகேசரி)

குருணாகலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 80பேர் கொல்லப்பட்டனர்.

08.12.89 (வீரகேசரி)

"வடக்கு–கிழக்கு மாகாணசபையைக்–கலைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை. புலிகள் ஜனநாயக வழிக்கு வந்தால் மாகாணசபையைக் கலைக்கத் தயார் என்று வடக்கு–கிழக்கு முதல்வர்தான் கூறியிருக்கிறார்" –ரனில் விக்கிரமசிங்க

இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து இராமேஸ்வரம் வழியாக இராமநாதபுரம் வந்து சேரும் அகதிகளின் தொகை அதிகரித்துச் செல்கிறது. கடந்த2 மாதங்களில் 179 குடும்பங்களைச் சேர்ந்த 508பேர் இராமேஸ்வரம் வந்து சேர்ந்துள்ளனர். இவர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் தங்கியுள்ளனர்.

மட்டக்களப்பில் தொடர்ந்து நடைபெறும் மோதல்களினால் சுமார் 20,000பேர் வீடுகளிலிருந்து வெளியேறி பாடசாலைகளிலும் தமது உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். மூவர் கொல்லப்பட்டுள்ளனர். பல வீடுகள் செல் தாக்குதலால் சேதமடைந்துள்ளன. போக்குவரத்துச் – சேவைகள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாத நிலையில் மக்கள் அவதியுறுகின்றனர்.

"அம்பாறை மாவட்டத்தில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுகின்றனர். தேசிய இராணுவத்தை மட்டும் ஆயுதங்களுடன்நடமாடத் தடைவிதித்ததேன்? எதற்கு இந்த வேறுபாடு?" என பத்திரிகையாளர்மகாநாட்டில் கேட்கப்பட்ட கேள்விக்கு "நாம் வேறுபாடு காட்டவில்லை. பாதுகாப்புப்படை, மக்கள் தொண்டர்படை, பொலிசார் தவிர யாரும் ஆயுதங்களுடன் நடமாட முடியாது" என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் பதி

www.tamilarangam.net

லளித்தார்.

மலையக மக்கள் தனித்துவத்துடன் வாழும் பிரதேசமான நுவரெலியா மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றம் இடம்பெற்றுவருகிறது. இதைத் தடுத்து நிறுத்தஉடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச விவசாயிகள் சம்மேளனம் தொண்டமானைக் கேட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பழுகாமம் என்ற இடத்தில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் 11பேர் கொல்லப்பட்டுள்ளனர். கெலி தாக்குதலும் நடத்தப்பட்டது.

04.12.89(ஐலண்ட்)

காத்தான்குடியில் ரி.என்.ஏ.யால் 3 முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர்.

09.12.89 (ஐலண்ட்)

பாண்டிருப்பில் 12 முஸ்லீம்கள் ரி.என்.ஏ.யால் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர்.

10.12.89 (டெய்லி நியூஸ்)

கன்னுமுனையில் ரி.என்.ஏ.யுடனை மோதலில் 10 ஈரோஸ் உறுப்பினர்கள்கொல்லப்பட்டனர்.

11.12.89 (வீரகேசரி)

நாவற்குழியில் வெட்டிப் போடப்பட்ட5 சடலங்களும், சுன்னாகம் மரக்காலைக்குள் 2சடலங்களும், வேறிடத்தில் 3 சடலங்களும் காணப்பட்டன.

பாண்டிருப்பி இந்து மயானத்தில் 12பேரின் சடலங்கள் இனந்தெரியாத கோ-ஊ்டியொன்றினால் புதைக்கப்பட்டிருப்ப-தாகக் கிடைத்த தகவலையடுத்து மேற்படி சடலங்கள் யாவும் தோண்டியெடுக்கப்பட்டன. இச் சடலங்கள் சில தினங்களாகக் காணாமல் போயிருந்தவர்களுடையது என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

"கிழக்கு சர்வஜன வாக்கெடுப்பில் எந்தத் தரப்பினதும் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லீம்களே இருக்கின்றார்கள். சர்வஜன வாக்கெடுப்பைத் தற்போதைய சூழ்நிலையில் நடத்துவதானால் பருவதைக்குள்ளாபவர்கள் முஸ்லீம் மக்கள்தான். எங்களை இஸ்லாமியத் தமிழர்கள் என அழைப்பது தவறு. நாங்கள் தமிழர்கள் அல்ல. முஸ்லீம்கள். தனித்துவமான இனத்தினர். இஸ்லாமியத் தமிழர்கள் என்றே எங்களை புலிகள் தங்கள் புத்தகம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளனர். இதை நான் ஆட்சேபிக்கிறேன்" –அஃ்ரப்

"விடுதலைப் புலிகளுக்குப் பணமும் கொடுக்கிறீர்கள். ஆயுதமும் கொடுக்கிறீர்கள். சீருடையும் கொடுத்துவிட்டால் சரி.

விடுதலைப் புலிகளை சட்டபூர்வ இராணுவமாக்கினால் அதையும் ஏற்கிறோம். இப்போது ஈரோஸ் இயக்கத்துக்கு ஆயுதம் வழங்கியிருக்கிறீர்கள். இதன் நோக்கம் என்ன?" –பாராளுமன்றத்தில் யோகசங்கரி.

12.12.89 (வீரகேசரி)

தெற்கில் வன்முறைச் சம்பவங்கள் திடீ-ரெனத் தலைதூக்கியுள்ளன. இச் சம்பவங்களில் 53 இ.போ.ச பஸ்கள் உட்பட பல அரச, தனியார் சொத்துகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. 50க்குமேற்பட்ட கொலைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

அம்பாறையில் வெள்ளையன் என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வவுனியா பூந்தோட்டத்தில் கனேந்திரன் என்பவரின் சடலம் காணப்பட்டது.

13.12.89 (வீரகேசரி)

தென்பகுதியில் இடம்பெற்ற வன்முறைகளில் ஒரே தினத்தில் 61பேர் பலியாகியுள்ளனர்.

தலைமன்னாரில் இடம்பெற்ற சம்பவத்தை தொடர்ந்து 7,500பேர் அகதிகளாக பேசாலைக்கு வந்துள்ளனர்.

கக்மலையில் தந்தையும், மகனும் கொல்லப்பட்டனர்.

14.12.89 (வீரகேசரி)

பசறையில் ஐ.சோ.மு மாகாணசபை உறுப்பினர் வீட்டில் 13பேர் சுட்டுக்கொல்லப்பட்டு எரிக்கப்பட்டுள்ளனர்.

கந்தரையில் கிராமசேவையாளரும், தெலியாவில் மூவரும், அக்குரஸவில் ஒருவரும், பதுளையில் ஒரு பெண் உட்பட மூவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

மாத்தறை பகுதியில் பலர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கினிஹமவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தகப்பனும், 2 பிள்ளைகளும் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

தங்காலையில் இ.போ.ச சாரதிகளான சகோதரர்கள் மூவர் வெட்டிக்கொல்லப்பட்டனர்.

அக்குரஸயில் தாயும், மகளும் வெட்டிக்கொல்லப்பட்டனர்.

பன்கமுவ என்ற இடத்தில் தந்தையும், மகனும், கம்புறுப்பிட்டியில் சகோதரர்கள் இருவரும் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

தங்காலையில் 5 சடலங்கள் எரிந்த நிலையில் காணப்பட்டன.

திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்கும் இடையேயுள்ள தமிழ்ப் பிரதேசத்தைத் துண்டிக்கும் வகையில் தமிழ் பகுதியில் மகிந்தபுர எனப் பெயர் சூட்டப்பட்ட இடத்தில் 150 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. இக் குடும்பங்களின் பாதுகாப்புக்கென இலங்கை இராணுவமும் முகாமிட்டுள்ளது. — ஈ.என்.டி.எல்.எவ்வின் அறிக்கை

யக்கமுல்லையில் 2பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

மாவரல்லயில் பொலிஸ்காரர் ஒருவரின் சகோதரி, அவரது கணவர், மாமனார் ஆகியோர் வெட்டிக்கொல்லப்பட்டனர்.

15.12.89 (வீரகேசரி)

மட்டக்களப்பில் மோதல்களின்போது பலியான 52பேரின் சடலங்கள் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன அடையாளம் காண முடியாத சடலங்களை மாநகரசபை பொறுப்பேற்றுள்ளது.

"இந்தியாவில் எந்தக் கட்சி ஆட்சியிலிருந்தாலும், எவர்தான் பிரதமராக இருந்தாலும் இந்தியாவின் நலனே அவர்களை பொறுத்தவரை அதி முதன்மையானது" — அதரா

17.12.89 (வீரகேசரி)

மூதூர் பிரதேசத்தில் இந்திய இராணுவத்தினர் தமது முகாம்களை மேலும் பலப்படுத்தி வருகின்றனர். இந்த முகாம்களில் இராணுவத்தினர் தொகை அதிகரித்து வருவதோடு புதிய பல முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன. புதிய முகாம்களும் இயங்கத் தொடங்கியுள்ளன.

www.tamilarangam.net

18.12.89 (வீரகேசரி)

மல்வத்தையைச் சேர்ந்த 2தமிழ் இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர்.இச் சம்பவத்தின் பின்னர் 6பேர் வெட்டுக் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெனியாவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

திக்குவெல,வலஸ்கல்ல,வெலிகிட்டிய ஆகிய இடங்களில் மனிதத் தலைகள் காணப்பட்டன.

19.12.89 (வீரகேசரி)

நாவலப்பிட்டியில் தந்தையும்,2 பிள்ளைகளும் கொல்லப்பட்டனர்.இப் பகுதியில் 10 சடலங்கள் மீட்கப்பட்டன.

20.12.89 (வீரகேசரி)

குருநகர்ப் பகுதியில் 2 இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

"மாகாண பொலிஸ் படையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக இலங்கைப் படை-யை வடக்கு-கிழக்குக்கு அரசு அனுப்பி வைத்துள்ளது"-ந.ச.ச.கட்சி பொதுச் செயலாளர்.

20.12.89 (டெய்லி நியூஸ்)

அரச இரகசியப் படைகளால் தென்பகுதியில் 40 இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

21.12.89 (வீரகேசரி)

"ஜனநாயக அரசியலில் நாம் பிரவேசித்திருப்பதால் இனித் தேர்தல்களில் -போட்டியிடுவோம்.ஏனைய தமிழர்குழுக்களும் எமக்கெதிராகப் போட்டியிடலாம்.தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் கட்சியின் பெயர் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி.அதன் தலைவர் மாத்தயா"-அன்ரன் பாலசிங்கம்

தெல்தெனியாவில் பொலிஸ்காரர் ஒருவரின் தந்தை,தாய்,சகோதரி ஆகியோர் கொல்லப்பட்டனர்.

22.12.89 (ஐலண்ட்)

24 மணித்தியாலத்தில் கம்பாந்தோட்டைப் பகுதியில் 170 இளைஞர்கள் -கொல்லப்பட்டு அவர்களின் சடலங்கள் வீதிகளில் வைத்து தீக்கிரையாக்கப்பட்டன.மீனவ,விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களே கொல்லப்பட்டவர்களில் அதிகமானவர்கள்.

22.12.89 (டெய்லி நியூஸ்)

"எல்.ரி.ரி.ஈ.யுடன் இலங்கை இராணுவமும்,இலங்கைப் பொலிசும் இணைந்து செயல்படுகின்றன.மட்டக்களப்பிலிருந்து ரி.என்.ஏ.யை விரட்டியழிக்கும் வேலையை இலங்கை அரசுக்காக எல்.ரி.ரி.ஈ. செய்துள்ளது"- பாதுகாப்பமைச்சர்

"இலங்கைப்படைகள் தமிழ் இயக்கங்களுடன் மோதுவதை நாம் விரும்பவில்-லை.ஏனெனில் இந்த இயக்கங்கள் இலங்கை அரசுக்கு வெளிநாடுகளில் கெட்ட பெயரை ஏற்படுத்தும்.இலங்கையரசு வடக்கு,கிழக்கில் தமிழ் மக்களைக் கொல்லுகிறது என இந்த இயக்கங்கள் வெளிநாடுகளில் பத்திரிகைகளுக்குத்தெரிவிக்க இது சந்தர்ப்பமளிக்கும்.மட்டக்களப்பில் ரி.என்.ஏ.யுடனான மோதலில் 100க்கும் மேற்பட்டவர்களை நாம் கொன்றுள்ளோம்"-அன்ரன் பாலசிங்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

22.12.89 (வீரகேசரி)

"யாழ்ப்பாணம், திருகோணமலையிலிருந்து படையை நீக்க இந்தியா தயக்கம் காட்டி வருகிறது" —பாதுகாப்பமைச்சர்.

செட்டிக்குளத்தில் நடந்த மோதலின் விளைவாக இருவர் கொல்லப்பட்டனர். கடை உரிமையாளரும், மற்றொருவரும் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டனர்.

"தமிழ்த் தேசிய இராணுவம் என அழைக்கப்படும் அமைப்பினைத் தாக்குவதாக கூறிக்கொண்டு ஜனநாயக அரசியலில் இணைந்துள்ள தமிழ் போராட்ட இயக்கங்களின் உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் கடந்த 1வருட காலமாக புலிகள் இயக்கம் தேடியழித்து வருகிறது. அமைதிப்படை வெளியேறியுள்ள அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் புலிகள் இயக்க ஆயுதபாணிகளால் கொல்லப்பட்டுள்ளனர். சரணடைந்தவர்களில் 60க்கும்மேற்பட்டவர்கள் பல்வேறு பகுதிகளிலும் — கொல்லப்பட்டுள்ளனர்" —ரெலோ

23.12.89 (வீரகேசரி)

மகாவலிகங்கை கரையோரமாக இரு சடலங்கள் கரையொதுங்கின.

கோகேற்ற பிரதேசத்தில் 2 சடலங்கள் எரிந்து கொண்டிருந்ததாக அங்கிருந்து வந்தோர் கூறினர்.

தெல்தெனிய பகுதியில் 10க்கும் மேற்பட்ட இனந்தெரியாத சடலங்கள் வீதியோரம் காணப்பட்டன.

கம்பாந்தோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மிக மோசமான வன்முறைச்சம்பவங்களில் 200 இளைஞர்கள் கொல்லப்பட்டதாக அங்கு வசிக்கும் மக்கள் கூறியுள்ளனர். ஒரே இடத்தில் 16 சடலங்களைத் தான் கண்டதாக பத்திரிகையாளர் தெரிவித்தார். மரங்களிலும், மின்சாரக் கம்பங்களிலும் சடலங்கள் கட்டப்பட்டு இருந்ததையும், பல பகுதிகளில் சடலங்கள் ரயர்கள் கொண்டு எரிக்கப்பட்டிருந்ததையும் மக்கள் கண்டுள்ளனர்.

26.12.89 (வீரகேசரி)

1990 ஜனவரி முதல் தபாற் கட்டணங்கள் அதிகரிக்கப்படும்.

"அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் தற்காலிக காதல் விவகாரம் ஒன்றிருக்கிறது. இந்திய அமைதி காக்கும் படையை விலகச் செய்துவிட்டு பின்னர் இலங்கை அரசைப் பயன்படுத்தி வடக்கு-கிழக்கு மாகாணசபையைக் கலைக்கச் செய்வதே புலிகளின் நோக்கம். தேர்தலில் புலிகள் போட்டியிடப் போவதாகவும், ஏனைய குழுக்கள் பங்குபற்றுவதைத் தடுக்கப் போவதில்லை என்றும் பாலசிங்கம் கூறியிருக்கின்றார். ஆனால் தங்களுக்கு எதிரான எவரையுமே புலிகள் வடக்கு கிழக்கில் விட்டு வைக்கப் போவதில்லை. தேர்தல்களில் வேறு எவரையும் போட்டியிட புலிகள் அனுமதிக்கப் போவதில்லை. தங்களை எதிர்க்கும் எந்த ஒருதமிழரையும், சிங்களவரையும், முஸ்லீமையும் அவர்கள் உயிருடன் விடப் போவதில்லை" — பாராளுமன்றத்தில் அநுரா

காலி மாவட்டத்தில் அதிபரும், அவரது மகனும், இன்னொரு பெண்ணும் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

www.tamilarangam.net

"ஜே.வி.பி.யின் தலைவர்கள் கொலை செய்யப்பட்டவுடன் ஆட்டம் முடிந்துவிட்டதென ஆகாயக் கோட்டை கட்டுேறாம். ஜே.வி.பி என்பது விஜேவீர அல்ல.இந்த நாட்டின் குறிப்பாக தென்னிலங்கையில் விரக்தியுற்ற சமூகம் ஒன்றின் வெட்டு முகம்தான் ஜே.வி.பி.அவர்களுக்குப்பல பிரச்சினைகள் இருக்கின்றன.அவர்கள் — கேட்பது என்ன?அவற்றுக்கு தீர்வு என்னி என்பதை ஆராய்ந்து நாம் விடை காண வேண்டும்.வடக்கு-கிழக்கில் காட்டு தர்பார் நடக்கிறது.முஸ்லீம்கள் மாத்திரமல்ல,தமிழ் இளைஞர்களும் நூற்றுக் கணக்கில் கொலை செய்யப்படுகிறார்கள்."
— பாராளுமன்றத்தில் அஃஸ்ரப்

27.12.89 (வீரகேசரி)

நாவலப்பிட்டியில் ஒரு இளைஞனதும், யுவதியினதும் உருக்குலைந்த சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

செம்றெக் பிரதேசத்தில் 3 சடலங்கள் கண்கள்,கைகள் கட்டப்பட்டு துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் கிடந்தன.

மெனிக்கின்ன பகுதியில் சூட்டுக் காயங்களுடன் 3 வாலிபர்களின் சடலங்கள் வீதியில் காணப்பட்டன.

பொலனறுவையில் 44 சடலங்கள் மீட்கப்பட்டன.

28.12.89 (வீரகேசரி)

றெட்டம்ப என்ற இடத்தில் திருமணவீடொன்றில் வைத்து இனந்தெரியாத ஆயுதபாணிகளால் 4 பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

நுவரெலியாவில் பாதுகாப்புப் படையினர் 12 தமிழ் தீவிரவாத இளைஞர்களை கைது செய்ததுடன் ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

29.12.89 (வீரகேசரி)

வவுனியா-மன்னார் வீதியில் நெலுக்குளத்தில் இடம்பெற்ற இயக்க மோதலின்போது 31 பேர் கொல்லப்பட்டனர்.

பொலனறுவை மாவட்டத்தில் 4 பெண்கள் உட்பட 19 பேர் பாதுகாப்புப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

30.12.89 (வீரகேசரி)

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 31 சடலங்கள் எரியுண்ட நிலையில் வீதியோரங்களில் காணப்பட்டன.

தனியார் பஸ் கட்டணங்கள் அதிகரித்துள்ளன.கோதுமை மா,பாண் விலைகளும் திடீரென அதிகரித்துள்ளன.

31.12.89 (வீரகேசரி)

செட்டிக்குளத்தில் இடம்பெற்ற இயக்க மோதலில் கொல்லப்பட்ட 11 பேரின் சடலங்கள் செட்டிக்குளம் ரயில் நிலையத்துக்கருகே போடப்பட்டுள்ளன.

30.12.89 (சன்)

செட்டிக்குளத்தில் இடம்பெற்ற இயக்க — மோதலில் 18 எல்.ரி.ரி.ஈ உறுப்பினர்களும்,28 ரி.என்.ஏ.உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர்.

கணவர் இராணுவத்தால் அடித்துச் சித்திரவதை செய்யப்பட்டதையடுத்து மனைவி நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.இச் சம்பவம் கோமகம எனும் இடத்தில் இடம்பெற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புராதன வாழ்விலிருந்து.

(கலம் 24இன் தொடர்ச்சி)

வெகுநேரமாய் வேட்டைக்கென்று அலைந்து திரிந்த களைப்பில் நதிக்கரையில் இருந்த பெரிய மரமொன்றின் கீழ் எல்லோரும் உறங்கலாயினர்.

ஆனால் அறு மட்டும் கவலையால் கண்விழித்தபடி இருந்தான்.

இரவு வெகு நேரமாகிவிட்டிருந்தது. தாகத்தால் அலையும் மிருகங்கள் எப்படியும் தண்ணீர் குடிக்க ஆற்றுக்கு வரும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

அவனது நம்பிக்கை வீண் போகவில்லை. ஒரு பெரியமரை கூட்டமே ஆற்றுக்கு வந்து கொண்டிருந்தது.

அறு எல்லோரையும் – உசார்ப்படுத்தினான். அவர்களைச் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து பற்றைக்குள் மறைந்திருக்குமாறு கூறினான்.

வேட்டையில் வல்லவர்களான அவர்கள் மரைக் கூட்டத்தின் மீது தங்கள் ஆயுதங்களுடன் பாய்ந்தார்கள். இரு மரைகளை கொன்றும், காயமடைந்த நாலு மரைகளைக் கொடியால் சுற்றிக் கட்டியும் இழுத்துக்கொண்டு தங்கள் இருப்பிடம் நோக்கி விரைந்தனர்.

அறுவின் மூதாதையர் வேட்டையில் கிடைத்த மிருகங்களை உடனேயே கொன்றுபோட்டுவிடுவார்கள். உயிருடன் மிருகங்களை பிடித்துச் செல்லும் பழக்கம் அவர்களிடம் இருக்கவில்லை. அவர்கள் குறிப்பிட்ட பகுதி என்றில்லாமல் எல்லாவிடமும் அலைந்து திரிந்தபடியால் மிருகங்களை உயிருடன் வைத்திருப்பது சிரமமாக இருந்தது.

எஸ்.குமாரசாமி

ஆனால் பிற்காலத்தில் காடுகளில் வறட்சி நிலவிய காலத்திலும், வேட்டையில் மிருகங்கள் அரிதாகக் கிடைக்கும் சந்தர்ப்பத்திலும் இவர்கள் பட்டினியால் இறக்க நேரிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவற்றைத் தவிர்ப்பதற்-
காக அனுவின் குடும்பத்தினர் மி
ருகங்களை உயிருடன் வளர்க்கும்
புதியமுறையைக் கண்டு கொண்ட்-
னர். சில கிழங்கு வகைகளையும்
பழங்களையும் உண்பதற்கும் பழ
கியிருந்தனர்.

ஐந்து அல்லது ஆறு தலை
முறைக்கு முன்பாகத்தான் அனு
வின் மூதாதையர் நெருப்பையுண்
டு பண்ணுவது எப்படி என்று
அறிந்து கொண்டனர். இது இவர்
களுக்குப் பெரிய நன்மையாக
இருந்தது.

பச்சையாக இறைச்சியை
உண்பதில் உள்ள ருசியின்மை, குட
ல்நோய்கள் என்பவற்றைத் தவி
க்கவும், மற்றும் இருட்டில் வெளி
ச்சமாகப் பயன்படவும், குளிர்
காய்வதற்கும், மிருகங்களிடமிரு-
ந்து தங்களைப் பாதுகாக்கவும்
எனப் பலவழிகளிலும் நெருப்பு
அவர்களுக்கு உதவியாகவிருந்தது.

அனுவும் கூட்டத்தவரும் -
குகையை அடையும்போது அநே
கமாக இரவாகிவிட்டிருந்தது.
கொல்லப்பட்ட இரு மரைகளை
யும் நெருப்பில் வாட்டுவதற்கா
ன வேலைகள் தொடங்கின.

அனுவின் மூத்த மகன் கற்
களை உரசி பல சிரமங்களுக்கு
மத்தியில் நெருப்பை உண்டு பண்
ணினான்.

மரைகளை நெருப்பில் -
வாடப் போட்டுவிட்டு எல்லோ
ரும் பாவனை நடனம் என்றழை
க்கப்படும் பண்டைய நடனமுறை
யில் தமக்குள் கட்டிப் பிடித்து
ஆடி மகிழ்ந்தனர். தாங்கள் இப்
படிப் பாடி நடனமாடுவதால்
தான் நெருப்பில் போடப்பட்ட
மரைகள் வேகுவதாக கருதினர்.

ஒருவாறு வதங்கிய மரை
களைக் கூரான கற்களால் கிழி
த்தும், அறுத்தும் தமது அன்றைய
பசியைப் போக்கிக் கொண்ட
னர். மிகுதியை மறுநாள் உண்ப
தற்காக வைத்துவிட்டு அவர்கள்
நித்திரைக்குத் தயாராக நேர
ம் அதிகாலையாகிவிட்டிருந்தது.

அவர்களுக்கு நேரத்தைப்
பற்றிக் கவலையில்லை. எப்போ
து சாப்பிடுவார்களோ அதன்
பிறகு தூக்கத்துக்குச் செல்வா
ர்கள். தூக்கம் முடிந்ததும் மீண்
டும் உணவு தேடும் படலம் ஆர
ம்பிக்கும். இதுதான் அவர்களின்
வாழ்க்கை.

இப்போது உணர்வுகள்
புணர்தலை விரும்பிற்று. அனு இன்
று தனது தகப்பனுக்கும் தனக்
கும் பிறந்த இரண்டாவது மக
ளை அழைத்துக் கொண்டாள்.
இப்படியே மற்றவர்களும் தங்க
ளுக்கானவர்களைத் தெரிவுசெய்
தார்கள்.

அவர்களுக்குள் உடலுறவு
சம்பந்தமாக சமூக நெறிகள்
எதுவும் இருக்கவில்லை. தாய்-
மகன், தந்தை-மகள், அண்ணன்-
தங்கை என்ற உறவுகள் வரைய
றுக்கப்பட்டிருக்கவில்லை. அவர்
களைப் பொறுத்தவரை ஆண்கள்
-பெண்கள் என்ற வேறுபாட்டை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மட்டுமே கடைப்பிடித்த ஒரு காட்டுமிராண்டிச்சமூகமாகவே வாழ்ந்து வந்தனர்...."

கதை இப்படியாகப் போய்க்கொண்டிருந்தது. மகேசன் வாசிப்பதை நிறுத்தி விட்டு அர்த்தமுள்ள புன்னகையொன்றை உதிர்த்தவாறு காந்தனைப் பார்த்தான்.

---



"இஞ்சதானே கிறைண்டர், மிக்சர் எல்லாம் வாங்கலாம். நீ ஆட்டுக்கல்லு வேண்டி வைச்சிருக்கிறாய்?"

"கருவேப்பிலை, கறுவா எண்டு எல்லாம் சிலோனில இருந்து வரேக்கை, ஆட்டுக்கல்லையும் அங்கயிருந்து எடுப்பிச்சு சமையலுக்கு பாவிச்சாத்தான் சிலோனில இருந்து சாப்பிட்ட மாதிரி இருக்கும்"

"நல்ல காலம். சிலோனில இருந்து படவெடி எடுப்பிச்சு வீட்டைச் சுத்தி கொளுத்திப் போடாம இதோட நிப்பாட்டியிட்டாய்"

— சின்னண்ணு.

---

தான் அறிந்த இப் புதிய விடயங்களைப் பற்றி மேலும் விளக்கங்களைப் பெறுமுகமாக காந்தன் மகேசனை நோக்கிச் சில கேள்விகளைக் கேட்டான்.

காந்தன்: பண்டைய சமுதாயத்தில் கடவுள் வழிபாடு ஏதும் இருக்கவில்லையா?

மகேசன்: அப்போது வாழ்ந்து வந்த ஆதி மனிதரிடையே சிந்தனையானது இன்று போல் வளர்ச்சியடைந்திருக்கவில்லை. இந் நிலையில் இடி, மின்னல், மழை, புயல், நெருப்புபோன்ற இயற்கையின் சீற்றங்களைக் கண்டு பயத்தாலும், வேதனையாலும் துன்பப்பட்டனர். மிரண்டனர். அவர்களுக்கு இவைகளெல்லாம் ஏன்? எப்படி? ஏற்படுகிறதென்று புரியமுடியவில்லை.

சொல்லப் போனால் மனிதரின் அன்றைய நிலையை "இயற்கைக்கு முன்னால் நிர்க்கதியாக நின்றனர்" எனப் பல அறிஞர்கள் கூறுவர்.

இப்படித் தனது கட்டுப்பாட்டில் இல்லாமல் அந்நியமாய் தனக்கு வெளியே நின்று கொண்டு தன்னைப் பயப்படுத்தும் இந்த நீர், நெருப்பு, காற்று... என்பவற்றை வணக்கத்துக்குரிய பொருளாக மதிக்கத் தொடங்கினர். தாம் வணங்குவதால் இவை சீற்றமடையாது எனக் கருதினர்.

அதுமட்டுமல்ல, இப்படி வணங்குவது ஆன்மீக ரீதியில் அவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ர்களுக்கு அமைதியையும் கொடுத்தது. இப்படித்தான் ஆரம்பகால கடவுள் வழிபாட்டுமுறைகள் உருவானது.

இந்த அடிப்படையிலேயே இந்து சமயத்திலும் நெருப்புக்கு அக்கினிதேவன் வழிபாடு, நீருக்கு வருணதேவன், காற்றுக்கு வாயு தேவன் வழிபாட்டு முறைகள் உருவானது. இப்படி இந்து சமயத்தில் மட்டுமல்ல ஏனைய சமயங்களிலும் இம்முறைகள் காணப்படுகின்றன.

காந்தன்: கதையில் அந்த மனிதக் கூட்டத்திற்குஏன் அனு என்ற பெண் தலைமை தாங்கினாள்? வேட்டையாடிய மனிதர்கள் எப்படி விவசாயம் செய்ய தொடங்கினார்கள்? ஆதி பண்டைய சமுதாயம் எப்படி இன்றுள்ள நிலைமைகளுக்கு வந்தது?

மகேசன்: இன்றுள்ளது போல் உற்பத்தியில் ஆண்களே முக்கிய பங்கு வகிக்கும் சமூகமாக அன்று இருக்கவில்லை ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையில் உழைப்புப் பிரிவினை ஏற்படவில்லை.

அன்று எல்லோரும் வேட்டைக்குச் சென்றார்கள். கிடைப்பவற்றைச் சமமாக உண்டு வாழ்ந்தார்கள்.

பிள்ளை பெறுவது, பராமரிப்பது போன்ற சில விசேட உடற் கூற்றுத் தன்மையால், ஆண்களைவிட அதிக உழைப்பைத்தாங்கிய படியால் இயல்பாகவே சமூகத்தின் ஆளுமை பெண்களிடமே இருந்தது. அதனால் தான் பண்டைய சமுதாயத்தை "தாய் வழிச் சமுதாயம்" என அழைக்கிறோம். இந்த முறையில் அக்கூட்டத்திற்கு அனு தலைமை தாங்கினாள்.

ஆனால் காலங்கள் நகர அனுவின் சந்ததியினரான பின்பு வந்த மனிதர்கள் சிறு சிறு சமூகங்களாகக் கூடி வாழ்ந்தனர். ஆண்களுக்கும், பெண்களுக்குமிடையில் உழைப்பு பகிர்வு ஏற்பட்டது.

ஆண்கள் வேட்டையாடினர் சண்டை போட்டனர், மீன் பிடித்தனர். இதற்குத் தேவையான கருவிகளைத் தயாரித்தனர்.

பெண்கள் வீட்டைப் பார்த்துக் கொண்டனர். உணவும், உடைகளையும் தயார் செய்தார்கள். குழந்தைகளையும், வயோதிபர்களையும் பராமரித்தார்கள்

அவர்கள் தமது தேவைக்காகவும், தாம் வளர்க்கும் பிராணிகளின் தேவைக்காகவும் பயிர் செய்யத் தொடங்கினர்.

நாடோடிகளாக வாழ்வதில் வெறுப்புற்ற மனிதர்கள் வளமுள்ள நிலங்களைத் தேடிச் சென்று குடியேறினர். இப்படிக் குடியேறியவர்கள் தங்களின் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டு உபரியாகவும் (மேலதிகமாகவும்) உற்பத்தி செய்தார்கள். கால்நடைகளை வளர்ப்பதன் மூலமும் தங்கள் செல்வத்தைப் பெருக்கிக் கொண்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதனால் தேவைகளும் அதிகரிக்க மேலும் மேலும் உழைப்பும், செல்வமும் தேவைப்பட்டன உற்பத்தியும், உபரியும் அதிகரித்தது.

இதனால் நாடோடிகளாக வாழும் வேடர் சமூகங்களுக்கு இடையிலும் உழைப்பில் பகிர்வு ஏற்பட்டது. ஏனெனில் வேடர் சமூகம் தனது வேட்டைப் பொருட்களைக் கொடுத்து விவசாய இடையர் சமூகங்களின் மிகை உற்பத்திப் பொருட்களைப் பண்டமாற்றுச் செய்து கொண்டனர்

பின்பு இன்னும் உற்பத்திப் பெருக்கமும், தேவைகளும் அதிகரிக்க புதிய உலோகங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அப்போது பட்டறைகளில் பாவிக்கப்படும் துருத்தியின் உபயோகத்தை மனிதர் கண்டுபிடித்தனர்.

இதன் உதவியால் உலோக உற்பத்தி, வண்டிகள், மட்பாண்டம் செய்யும் கருவிகள், சக்கரங்கள் என்பவற்றைச் செய்யத் தொடங்கினர். இச் சிறு கைத்தொழில் வளர்ச்சியானது விவசாயத்திற்கும், கைத் தொழிலுக்குமிடையில் வேறுபாட்டை, பிளவை உண்டு பண்ணியது.

மனிதர்களுக்கிடையில் ஏற்பட்ட இந்த உழைப்பு பகிர்வு தான் வர்க்கங்கள் இல்லாத சமுதாயமாக வாழ்ந்தவர்களை வளர்ச்சிப் போக்கில் அடிமைச் சமுதாயம், நிலப்பிரபுத்துவ சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம்... என வளர்ச்சியடைய வைத்தது.

ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து முடித்தான் மகேசன்.

நேரமோ இரவு பன்னிரண்டு மணியாகிவிட்டிருந்தது. இதற்கு மேலும் மனிதரின் பண்டைய வாழ்வை அறிந்துகொள்ள இது சம்பந்தமான புத்தகங்களின் பெயர்களை காந்தனுக்கு கூறினான்.

நேரம் சாமப் பொழுதையெட்டிப் பிடித்திருந்ததால் காந்தன் மகேசனின் வீட்டு விறாந்தையில் விரிக்கப்பட்டிருந்த பாயில் நித்திரைக்கு ஆயத்தமானான்.

இக் கட்டுரை சுவிஸிலிருந்து வெளியாகும் 'மனிதம்' சஞ்சிகையிலிருந்து நன்றியுடன் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

(42ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதுவாகவிருந்தாலும் பல பேர் காணமற் போயிருந்தார்கள். அப்படியானால் ஏன் இன்னும் பலர் எஞ்சியிருக்கிறார்கள்?

நம்பிக்கைகள்தான் !

மீரா தனக்குள் யோசித்தபடி நடந்துகொண்டிருந்தாள். இருளாகவிருந்தாலும் அவள் கண்கள் அதற்குப் பழக்கப்பட்டிருந்தன.

(இன்னும் வரும்)

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

கலம் 23இல் வெளியான ஆனந்த பிரசாத், ராஜ் ஆகியோரின் கவிதைகள் இன்றுள்ள நிலைமைகளை எடுத்துக் காட்டியுள்ளன.

சி. பாலனின் "நான் ஏன் அழவேண்டும்?" சிறுகதை நன்றாகவே இருந்தது. ஆனாலும் இத்தகைய மிருகத் தாக்குதலுக்குஉள்ளான ஒரு பெண்ணின் மனம் பழி வாங்கத்தான் துடிக்கும். நாற்பது வயதுவரை அவள் உணர்வுகளை மதித்து அவளை ஏற்க மறுத்த ஆண்களின் மேல் வெறுப்பு வராமல் சாக்கடையா? சந்தனக் குழம்பா? என்று அவள் குழம்புவதாக எழுதியிருப்பதைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. நம் எழுத்தாளர்கள் வெள்ளைப் புடவையைக் கண்டால் குங்குமத்தால் புள்ளி வைப்பார்கள். ஆனால் செயலில்...? சி. பாலன்ஏன் இப்படி பெண்களை ச்.. என்று எழுதுகிறார்?

ஒவ்வொரு கலத்திலும் கனவை மிதித்தவன் தொடர்வரும் என எதிர் பார்ப்போம். நம் கனவை சில கலங்கள் மிதித்து வந்தன. உள்ளங்கள் உறங்கிவழிய உபதேசங்களைக் கொப்பளிக்காது, உணர்ச்சியுடன் வெளியிட்டால் வரவேற்கும் வண்ணம் இருக்கும்.

- ந. பானு

தூண்டிலில் ஆக்கங்கள் - வெளியிட இடம் போதவில்லையெனில் வெளியிடும் ஆக்கங்களை சிறிய எழுத்துகளாக்கி வெளியிட்டால் என்ன?

கலம்23இன் செய்திக்குறிப்பில் 'இலங்கை செலுத்த வேண்டிய மொத்த வெளிநாட்டுஉள்நாட்டு கடன்களின் தொகை 221,917ரூபாவாகும் (இதுவே உண்மை நிலையென்றால் நாட்டுநலனில் அக்கறையுள்ளவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்?) என்ற செய்தியில் இருந்த தவறு கலம் 24இல் பக். 17ல் வெளியாகிய இன்னன்றுவின் நகைச்சுவைத் துணுக்கினால் வாசகர்களின் சந்தேகத்தைப் போக்கியிருக்கும். ஏன் நீங்கள் இந்தத் தவறுகளை அவதானிப்பதில்லை? அவதானித்து அடுத்த பிரதியில் பிழை திருத்தம் பற்றிக் குறிப்பி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டுவதில்லை. இவை சோம்பேறித்தனத்தின் அடையாளங்களா?

கலம் 24இல் 'இந்தியாவின் புதிய பிரதமர்' என்றதலைப்பில் வெளியான கட்டுரையில் பக். 37இல் '..சீர் திருத்தங்கள் செய்துவரும் நேரத்தில் - 400கோடி ஏழைமக்களின் வாழ்க்கைத்தரம்...' எனக் காணப்படுகிறது.

இந்திய மொத்தச் சனத்தொகையே இன்னும் நூறு கோடியைத் தாண்டியிருக்காது. ஆனால் நீங்களோ சாதாரணமாக 400 கோடி மக்கள் என்று வெளியிட்டிருக்கிறீர்கள்.

எம்மிடம் ஓவியர் இல்லாததால் அட்டைப் படங்களை மட்டுமல்ல ஏனைய படங்களைக்-கூட எமது கருத்துக்கேற்ப பெற்றுக்கொள்ள முடியாமலிருக்கிறது எனக் குறிப்பிட்டிருக்கிறீர்கள் நகைச்சுவைத் துணுக்குகள் சித்திரங்களுடன் வெளியாகியிருக்கின்றனவே?

'தொடரும் இரத்தக் களரி' எனும் தலையங்கத்தின் முடிவில் '..ஆயினும் இந்த இரத்த களரிகளே என்றும் நிரந்தரமானவையாக இருக்கப் போவதில்லை' என முடித்திருக்கிறீர்கள்.

இவை நிரந்தரமானவை-யாக இருக்கப் போவதில்லை என்பது எமக்கு நாமே கூறிக்கொள்ளும் ஆறுதல் வார்த்தைகளா? இன்று வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல உலகெங்கும் அகதிகள் ஆகவும், அல்லாமலும் வாழ்ந்துகொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்கள் அனைவரது கேள்வியும் இதற்கு ஏதாவது மாற்றுத் திட்டம் இருக்கிறதா? என்பதாகத்-தான் இருக்குமென எண்ணுகிறேன். நான் இந்தியாவின் புதிய அல்லது பழைய அரசிற்கு, அதன் நடவடிக்கைகளுக்கு உடன்பாடானவன் எனக் கருத வேண்டாம்.

கடந்து வந்த தமிழீழ அரசியல் பாதையை குறிப்பாக 1977இற்குப் பின் அவதானித்-தால் தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசின் அன்றைய ஜனாதிபதியும் ஆடிய கபடநாடகங்களும், அராஜகங்களும் நன்கு புரியும்.

இன்று வடக்கு, கிழக்குப் பகுதியில் குறிப்பாக வடக்கில் தமிழ் மக்களது, அங்கு வாழும் மக்களால் நிர்ணயிக்கப்படும் அசாங்கத்தூப் படைகள் அன்றி வேறு நாட்டுப் படைகள் அது சிறிலங்கா அரசின் இராணுவமாயிருந்தால் கூட தங்கள் கடமைகளைச் செய்ய முடியாதென்பது அனைவரும் அறிந்த உண்மை

இத்தகைய மனப்பான்மை அங்கு தற்சமயம் வாழுகின்ற மக்களுக்கு இருக்கிறதென்பதை சிறிதளவிலாவது அறிந்திருந்ததால் தான் இந்திய அமைதிப் படை தமிழ்த் தேசிய இராணுவம் ஒன்றை அமைக்கும் முயற்சிக்கு ஆதரவு கொடுத்திருக்குமென நினைக்கிறேன்.

www.tamilarangam.net

இன்று பேச்சுவார்த்தைகளுடன் தன்னை அரசியல் கட்சியாகப் பதிவு செய்திருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் 1987 யூலை ஒப்பந்தப்படி அன்று நடந்துகொள்ளவோ, அன்றைய இலங்கை ஜனாதிபதிக்கும், இந்தியப் பிரதமருக்கும் தங்கள் ஒத்துழைப்பைக் கொடுக்க முன்வரவில்லை?

நீங்கள் படித்த, கேட்ட செய்திகளின் அடிப்படையில் நீங்கள் அறிந்தவற்றை மற்றவர்களுக்கும் தெரிவிப்பதற்காக தலையங்கம் எழுதியுள்ளீர்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த காலங்களில் நடந்து கொண்டவைகளிலும் பார்க்க மிகவும் அசிங்கமான அரசியலில் தற்சமயம் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை தைரியமாக எழுதவில்லை.

இலங்கையில் நடைபெறும் அரசியலை ஆச்சரியத்துடனும், ஆழமான கவலையுடனும் கவனித்துவரும் வாசகர்களுக்கு, இதற்கு ஏதாவது மாற்றுத் திட்டம் இருப்பதாகக் கோடி காட்டியிருக்கலாம். வரும் கலங்களிலாவது இதனை எதிர்பார்க்கலாமா?

— மா.கு

ஆக்கங்களை சிறிய எழுத்துகளாக்கி வெளியிடுவதன் மூலம் அதிகளவு பக்கங்களை மீதப்படுத்த முடியாமலுள்ளது. தவிர பக்கமின்மைக்காக எழுத்துகளைச் சிறியதாக்கி. வாசிப்பவர்களைச் சிரமப்படுத்துவதும் விரும்பத்தக்கதல்ல.

தவிர்க்க கூடிய எழுத்துப் பிழைகள் நடைமுறைச் சிக்கல்களில் ஒன்றானநேரமின்மையாலும் இடம்பெற்று விடுகின்றன. 'தூண்டில்' தயாரிப்பு வேலைகளுக்கான ஒத்துழைப்புகள் முழுமையாக் கிடைக்கும்போது இவை தவிர்க்கப்படும். பிழை திருத்தம் பற்றிக் குறிப்பிடாமைக்கு வாசகர்களிடம் மன்னிப்புக் கோருகிறோம்.

நகைச்சுவைத் துணுக்குகளுக்கான சித்திரங்களும் வேறு சஞ்சிகைகளிலிருந்து 'எடுக்கப்பட்டவையே'. சென்ற கலத்தில் இதைக் குறிப்பிடாதது எமது தவறேயாகும்.

எல்.ரி.ரி.ஈ பற்றி தைரியமாக எழுதவில்லை என்று குறிப்பிட்டுள்ளீர்கள். நாங்கள் எழுதியுள்ளோம்.

இலங்கையில் நடைபெறும் அரசியல் பிரச்சனைகளுக்கானதும், ஏனைய பிரச்சினைகளுக்கானதும் தீர்வுகளுக்கான ஆய்வுகளும், தேடலும் என்ற நிலையிலேயே நாம் இருக்கிறோம். அடுத்தவர்களின் தீர்வுக்காக எதிர்பார்த்திருக்காது மனிதாபிமானமுள்ள அனைவருக்கும் இத்தேடலில் ஈடுபடவேண்டிய கடமையுள்ளது.

— கடலோடிகள்

பத்திரிகைகளின் தேவைகளிலும், பத்திரிகை எப்படி வெளிவரவேண்டும் என்பதிலும் எனக்கு சில கருத்துகள் உண்டு. தூண்டில் அவற்றை ஓரளவு நிறைவு செய்கிறதென்றே கருதுகின்றேன். — பொதுவாக பத்திரிகைகள் சமுதாயத்தில் நிலவும் விடயங்களின் கண்ணாடி விம்பங்களாக உள்ளனவே தவிர, விடயங்களில் ஆழமான பார்வையையோ, தீர்வுகளையோ கொண்டிருப்பதில்லை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'தூண்டில்' தீர்வை நோக்கி முன்னேறும் என எதிர்பார்க்கிறேன்.

– அகிலன்

கலம் 23இல் வெளியான அம்சங்கள் அனைத்தும் நிறைவானவை. அரசியல் பற்றி அதிகம் எதுவும் தெரியாமல் இருந்தாலும் அவற்றை விட்டு வைப்பதில்லை. வாசிக்கிறேன். வாசிப்பதில் தெரியாமல் மறைந்து இருப்பதைப் புரிய முடிகின்றது.

ஆனந்தபிரசாத், ராஜ்ஆகியோரின் கவிதைகள் தற்போதைய நாட்டுநிலைமைகளை எடுத்துக் காட்டுகின்றன. சி. பாலனின் 'நான் ஏன் அழவேண்டும்?' சிறுகதை நன்றாகவே இருக்கின்றது. ஆனாலும் பாலனின் சில கற்பனை வரிகளைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. பெண் என்றாலே அவருக்குச் சகித்துக்கொள்ள முடியவில்லைப் போல் எல்லாமே எழுத்துகள் தானேஎன்று எழுதிவிட்டாரோ?

– வே. உதயா

**பிழை திருத்தங்கள்**


கலம் 23இல், செய்திக் குறிப்பு பகுதியில் "இலங்கை செலுத்த வேண்டிய மொத்த வெளிநாட்டு, உள்நாட்டு கடன்களின் தொகை 221,917 மில்லியன் ரூபாவாகும்" என்று பிரசுரமாகியிருக்க வேண்டிய செய்தியில் 'மில்லியன்' என்றசொல் விடுபட்டுள்ளது.

கலம் 24இல் "இந்தியாவின் புதிய பிரதமர்" என்ற கட்டுரையில் "... 40மில்லியன் ஏழைமக்களின்..." என்று பிரசுரமாவதற்குப் பதிலாக "400 கோடி ஏழை மக்களின்.." என்று தவறாகப் பிரசுரமாகியுள்ளது.

எமது கவனயீனத்தால் ஏற்பட்ட இத்தவறுகளுக்காக வருந்துகிறோம்.

– கடலோடிகள்

## மேற்கு ஜேர்மனியில் 'விநோத' முயற்சி !!!




மேற்கு ஜேர்மனியின் டோற்முண்ட் நகரத்தில் உருவாக்கப்பட்ட 'மேற்கு ஜேர்மனி தமிழ்க் கல்விச் சேவை (?)' இலங்கைப் பாடத்திட்டத்தில் <u>சினிமாவைப்</u> புகுத்தியுள்ளது.

இதன் முதற் கட்டமாக சிவாஜியின் திரிசூலம்.

அடுத்த கட்டம்.... ???

ஆதாரம்: கலைவிளக்கு (தீபம் 22)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொலண்டில் இயக்கத்தின் கொலை மிரட்டல் !?

கொலண்டில் எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (TCC) என்ற அமைப்பை ஸ்தாபித்து இயங்கி வருகிறார்கள். இவர்களே இங்கு வாழும் தமிழ் அகதிகளிடமிருந்து பலவந்தமாகப் பணம் சேகரித்து எல்.ரி.ரி.ஈ.க்கு அனுப்பி வருகிறார்கள்.

15.10.89இல் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த 5 உறுப்பினர்கள் தமிழ்-டச் மனித உரிமைச் சங்கம் என்ற அமைப்பின் காரியதரிசி வீட்டுக்குச் சென்றார்கள். அங்கிருந்த காரியதரிசியை அவர்கள் மோசமாகத் தாக்கி, அடித்துக் கீழே விழுத்தி, நெஞ்சிலும், ஆணுறுப்பிலும் பலமாகத் தாக்கினார்கள்.

பின்னர் அவரைத் தூக்கி நிறுத்தி தலையில் பிஸ்டல் ஒன்றை வைத்துப் பிடித்தபடி தாங்கள் ஏற்கெனவே தயாரித்துக் கொண்டு வந்த கடிதம் ஒன்றில் அவரைக் கையெழுத்து வைக்கும்படி மிரட்டினார்கள்.

"ஒரு வருடமாக இயங்கி வந்த தமிழ்-டச் மனித உரிமை சங்கம் மக்களின் ஆதரவில்லாத படியினாலும், தொடர்ந்து இயங்குவதற்கு எந்தச் சாத்தியமும் இல்லாததாலும் கலைக்கப்படுகிறது" என அக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. புலி உறுப்பினர்களின் மிரட்டலினால் காரியதரிசி அக் கடிதத்தில் கையெழுத்திட்டு கொடுத்தார்.

அதன் பின்பு தான் தற்கொலை செய்வதாக பொலிசுக்கு கடிதம் எழுதும்படி அவர் பலவந்தப்படுத்தப்பட்டார். அக் கடிதத்தையும் காரியதரிசி எழுதிக் கையெழுத்திட்டார். அக்கடிதத்தைப் பெற்றுக்கொண்ட புலி உறுப்பினர்கள் அவருக்கு நடந்த சம்பவத்தை வெளியே யாருக்காவது தெரிவித்தால் அவரைக் கொலை செய்துவிட்டு அவர் கையெழுத்திட்ட தற்கொலைக் கடிதத்தைப் பொலிசுக்கு அனுப்பி வைப்போம் என எச்சரித்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்னர் அவரிடமிருந்து — 800 கில்டர்களைப் பறித்துக் கொண்ட புலி உறுப்பினர்கள் இரத்தக் காயங்களுடன் வலியால் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த அவரையும் இழுத்து தங்கள் காரில் ஏற்றிப் போட்டுக்கொண்டு தமிழ்.டச் மனித உரிமைகள் சங்க இணைப்பாளர் வீட்டுக்குப்போனார்கள். சங்கத்தை கலைத்துவிடுவதாக எழுதப்பட்டிருந்த கடிதத்தில் இணைப்பாளரும் மிரட்டப்பட்டு கையெழுத்திட வைக்கப்பட்டார்.

தமிழ்-டச் மனித உரிமைகள் சங்கம் மக்களின் ஆதரவை பெற்று வருவதினாலும், புலிகளைத் தவிர வேறு யாரும் அமைப்பு ரீதியாக இயங்கக் கூடாது என்பதற்காகவுமே தமிழர் ஒருங்கிணைப்புக் குழு என்ற பெயரில் இயங்கும் புலி உறுப்பினர்கள்அச் சங்கத்தை பலாத்காரமுறையில் கலைத்தனர்.

காரியதரிசியும், இணைப்பாளரும் மிரட்டப்பட்டும், தாக்கப்பட்டும் கையெழுத்திட்ட சம்பவம் நடந்த மறுநாள் கொலண்டில் வசிக்கும் தமிழ் அகதிகளுக்கு தமிழ்-டச் மனித உரிமைகள் சங்கம் கலைக்கப்பட்டுவிட்டதாக காரியதரிசியும், இணைப்பாளரும் கையெழுத்திட்ட கடிதங்கள் அனுப்பப்பட்டன. இக் கடிதம் கிடைத்தவர்களில் பலர் ஆச்சரியமடைந்து இச் சங்க உறுப்பினர்களுடன் தொலைபேசியிலும், நேரிலும் தொடர்புகொண்டபோதும் உண்மை விபரங்களை அவர்களால் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

காரணம் இச் சம்பவங்கள் பற்றிய உண்மைகள் வெளியே தெரிய வந்தால் இச் சங்கத்தைச் சேர்ந்தவர்களின் இலங்கையில் வசிக்கும் குடும்பங்கள் புலிகளால் கொலை செய்யப்படுமென தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் மிரட்டப்பட்டிருந்தனர்

09.01.90 ஆம் திகதி வெளியிடப்பட்ட 'ட்றௌ' என்ற டச் பத்திரிகையிலிருந்தே கொலண்டில் உள்ள தமிழ் அகதிகள் இச் சம்பவங்கள் பற்றி அறிய முடிந்தது.


பெயர் தெரிவிக்க விரும்பாத ஒரு இலங்கையர் தெரிவித்த தகவல்: மனித உரிமைகள் சங்க உறுப்பினர்கள் மட்டும் இந்த தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவால் மிரட்டப்படவில்லை. கொலண்டில் இருக்கும் சுமார் 400 தமிழ் அகதிகளில் பெரும்பாலானோர் பலவந்தப்படுத்தப்பட்டு 30-200 கில்டர்வரை மாதாமாதம் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவுக்குப் பணம் கொடுத்துவருகிறார்கள். இப்படிப் பணம் கொடுக்க மறுப்பவர்களின் இலங்கையிலிருக்கும் குடும்பங்கள் இயக்கத்தால் 'கவனிக்கப்படும்' என அவர்கள் மிரட்டப்பட்டுள்ளனர்.

தங்கள் அரசியல் தஞ்சத்தின் முடிவு தெரியாதவர்கள் அதாவது கொலண்டில் தாங்கள் தொடர்ந்து வசிக்கும் அனுமதி இதுவரை கிடைக்கப் பெறாதவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"நீ சைக்கிள் டைனமோவைத் திருடியது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம்"

"இதென்ன நியாயம்? ஆமி, பொலிஸ் எல்லாம் சோதனை போடுறம் எண்டு சொல்லிக்கொண்டு வீடுகளில இருக்கிற நல்ல சாமாங்களையெல்லாம் அள்ளிக் கொண்டு போறுங்கள். இயக்கங்கள் கடையளில கப்பம் கேக்குது. ஆக்களைக் கடத்தி வைச்சு கொண்டு பணம் பிடுங்குது. நீங்கள் என்னெண்டா ஒருநாள் வயித்துப்பாட்டுக்கு சைக்கிள் டைனமோ களவெடுத்ததுக்காண்டிஎன்னைப் பிடிச்சு தண்டிக்க நிக்கிறியள்"

– சின்னன்று

கள் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவுக்கு கூடுதலான பணத்தைக் — கொடுத்து வருகிறார்கள். இலங்கைக்குத் திரும்பி வரும்போது — ஆபத்தைச் சந்திக்க நேரிடும் என இவர்களைப் பயப்படுத்திப் பணம் பிடுங்குவது இக் குழுவினருக்குச் சுலபமாக உள்ளது.

முழு ஐரோப்பாவிலுமே எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள்இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். சில வருடங்களுக்கு முன்னர் மேற்கு ஜேர்மெனியில் இருக்கும் தமிழ் அகதிகள் புலி உறுப்பினர்களால் மிரட்டப்பட்டும், தாக்கப்பட்டும் பணம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். இப்படியான மிரட்டி பணம் பறிக்கும் சம்பவங்கள் பற்றி உடனடியாகப் பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கும்படி — கோரும் துண்டுப் பிரசுரங்களை மேற்கு ஜேர்மெனியின் ஸ்ருட்காட் நகர குற்றவியல் திணைக்களம் வெளியிட்டு மேற்கு ஜேர்மெனிக்குள் பிரவேசிக்கும் தமிழ்அகதிகளுக்கு விநியோகித்து வருகிறதாம்.

இப்படியான அராஜகங்களுக்கெதிராக நாம் செயற்படாதிருப்போமாயின் டென்மார்க், சுவீடன், இங்கிலாந்து, இத்தாலியென்று இயக்க அராஜகங்கள் தொடரலாம்.

ஐரோப்பிய நாடுகளிலேயே ஆட்களைத் தாக்கி, மிரட்டி பணம் பிடுங்கும், இயங்க விடாது தடுக்கும் இவர்கள் இலங்கையில் மக்களுடன் எப்படி 'நடந்து' கொள்வார்கள் என்பதை அனைவரும் சுலபமாகப் புரிந்துகொள்ளலாம். இன்றும் கூட நாங்கள் உதிரிகளாகவே இருப்போமானால் இப்படியான அராஜகக் கும்பல்களின் பலம் அதிகரித்தேயிருக்கும்.

கொலண்டிலிருந்து....


நமது நிருபர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தரையை மிதித்தவன்

- பார்த்திபன்

சூரியன் மஞ்சளாய் பனங்கூடலுக்குள் விழுந்தது. ஓலைகள் ஒளியை அதிகம் தடை பண்ணவில்லை. பாளைகளை உள்வாங்கியிருந்த முட்டிகளும் பிரகாசித்தன.

தலைநாரின் காப்புறுதியுடன் ஒருவர் பாரங்களைச் சுமந்தபடி விறுவிறுவென இறங்கிக்கொண்டிருந்தார்.

சுதாவும், மீனுவும் வீட்டு முன் வாசற் படிகளில் உட்கார்ந்திருந்தார்கள்.

ஒவ்வொருவருக்கும் பக்கத்திலிருந்த குவளைகளில் கருந்தேநீர் கொஞ்சமாயிருந்தது.

"அப்ப இனி என்ன நடக்குமெண்டு நீ நினைக்கிறாய்?" சுதா ஒரு வாய் உறிஞ்சிவிட்டுக் கேட்டாள்.

"நாடகத்தில சீன் மாறுது. ஒரு ராசா தன்ரை பரிவாரங்களோட வனவாசம் செய்யப்போக, இவ்வளவு காலமும் காட்டுக்குள்ள இருந்த ராசா தன்ரை பரிவாரங்களோட ஆட்சிக் கட்டுக்கு வாறார்" என்றாள் மீனு.

அவளின் கண்கள் ஒரு பனையை முடித்துவிட்டு, அடுத்த பனையில் உயிரை உயரத்துக்கு தூக்கிக் கொண்டு போகும் உழைப்பாளியில் பதிந்திருந்தது.

"அப்ப சனங்கள்...?"

"மாறி மாறி எல்லா ராசாக்களும் ஆடுற கொட்டத்தையடக்க சக்தி இராதவரையும் அடக்க ஒடுக்கமா வரி கட்டிக் கொண்டு, அடங்கின குடிசன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ங்களாய் இருக்க வேண்டினதுதான்"

"வரி கட்டிக்கொண்டு உயிர் தப்பிறதும் பறவாயில்லையே. ஒவ்வொரு நாளும் எவ்வளவு உயிருகளைக் காவு குடுக்க-வேண்டியிருக்கு"

"நானென்ன மக்களாட்சியே நடக்குதெண்டு சொன்னனான் ராசாக்களுக்கு என்ன பிடிக்கு-தோ அதுதான் நடக்கும். அவையளுக்கு உயிர்தான் தேவையெண்டால் தங்கட விருப்பப்படி பறிப்பினம்தானே? நீங்கள் அம்புலி-மாமா வாசிக்கிறயில்லையே?"

"நீயென்ன இருபதாம்நூற்றுண்டில நடக்கிற வாழ்க்கையை சாண்டில்யன்ரை சரித்திர காலத்தோட கொண்டே ஒப்பிடுறாய்"

"இதுதான் நிலைமை. நான் நினைக்கிற எல்லாத்தையுமே வாய் விட்டுச் சொன்னால் இண்டைக்கு இரவிலயிருந்தே அம்மாவுக்கு மீனு இல்லாமல் போக-லாம். நான் இப்பிடி கதைச்சாலும் என்ன சொல்ல வாறனெண்டு உனக்கு விளங்குதுதானே? நிலமையளுக்கு ஏத்த மாதிரி சனங்களும் எப்பிடிக் கூர்ப்படைஞ்சிட்டுதுகள் பாத்தியே? இன்னும் - கொஞ்சக் காலம் போக சில வேளை கையைக் காலை ஆட்டி சைகை முறையிலதான் கதைக்க வேண்டிவரும்"

"அதுக்கும் கெதியில பழகியிடலாம்"

பிறகு இருவரும் மௌன-மானார்கள். மீனு இன்னும் பனை-யையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஓலைக்குள் தன்னைச் செருகிக்கொண்டு பாளையைத்தயார்படுத்திக் கொண்டிருந்தார் அந்த உழைப்பாளி. கைகள் படு வேகமாக இயங்கிக் கொண்டிருந்தன. இடுப்பில் பிணைக்கப்பட்டிருந்த முட்டிகள் ஓலைகளுடன் உரசிக் கொண்டிருந்தன.

மாலைச் சூரியனின் ஒளி உழைப்பில் கறுத்த அந்த உடம்பில் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தது.

"எனக்கெண்டா நம்பிக்-கையே இல்லை. வெளிநாட்டுக்கு போய் தப்பிறவை தப்ப, இஞ்ச மண்டையோடுகள்தான் மிஞ்சப் போகுது" சுதா சலித்துக் கொண்டாள் அல்லது விரக்தியாகச் சொன்னாள்.

"அப்பிடிச் சொல்லாதை சுதா. நம்பிக்கை இல்லையெண்-டால் இண்டைக்கு இந்த தீவில வாழுறதெல்லாம் நடமாடுற பிரேதங்கள்தான். எவ்வளவு காலத்துக்கு, எவ்வளவு பேரைக்கொலைசெய்து குவிக்கலாம் எண்டு நினைக்கிறாய்?"

"என்ன என்னைப் போய் இப்பிடிக் கேக்கிறாய்? இயக்கங்கள் இனர்வியூ வைச்சு ஆக்களை எடுக்கிற மாதிரி இருக்கு உன்ரை கேள்வி" சுதாவின் சிரிப்பில் சிரிப்பில்லை.

"பகிடியில்லை. உண்மையா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ய்தான் கேக்கிறன். நூறு பேரை ஆயிரம்பேரை..?பத்தாயிரம் பேரை...?இலங்கையில இருக்கிறது ஆக இவ்வளவு சனமே ? எவ்வளவு காலத்துக்குத்தான்

கொண்டு கொண்டிருக்கேலும்?எவ்வளவு காலத்துக்குத்தான் சனங்களால தாங்கிக் கொள்ளேலும்?ஆயுதங்கள் வைச்சிருக்கிறம் எண்டாப்போல முடிவுகளைத்தீர்மானிக்கிறது இவையில்லை. இண்டைக்கு இவையளின்ரை பலம்ஆயுதங்களாலயும்,அதிகாரங்களாலயும் அதிகமாய் தெரியலாம் . ஆனா சரித்திரங்கள் எண்டைக்கும் சனங்களிலதான் தங்கியிருக்கு"

"வரவர நீ பெரிய தத்துவங்கள் எல்லாம் கதைக்கத் தொடங்கியிட்டாய்.கொஞ்ச - நாளாய் நீ உந்த மொத்தப்புத்தகங்கள் படிக்கேக்கயே நச்சனான்.உவள் லதாதான் உனக்கும் புத்தகங்கள் தந்து கெடுத்துப் போட்டாள்"

மீனு சிரித்துக் கொண்டாள். "நான் என்ன புதுசா தோன்றிற இடதுசாரியள் மாதிரி படிச்சதைஎல்லாம் அப்பிடியே ஒப்புவிக்கேலயே.படிச்ச சிலதுகளை யதார்த்தத்துக்கு கொண்டுவந்து பாக்கிறன்"

"உந்தா பாத்தியே.உனக்கும் பேச்சுத் தமிழே இல்லாமல் போய் இலக்கண,இலக்கிய வசனங்கள் எல்லாம் வரத்தொடங்கியிட்டுது.ரீயைக் குடியன் . அதை நானைக்குப் பின்னேரம் மட்டும் வைச்சுக் கொண்டிருக்- கேலாது.ஏனெண்டா கோப்பை வேணும்"சுதா ஞாபகமூட்ட , மீனு ஆறிப்போன தேநீரைஒரே மூச்சில் குடித்து முடித்தாள்.

மூன்றுவது பனையையும்முடித்துவிட்டு முட்டிகளுடன் அந்தச் சீவல் தொழிலாளி இறங்கிக் - கொண்டிருந்தார்.இனிச் சைக்கிளின் காண்டிலில் முட்டிகளைதொங்கவிட்டுக்கொண்டு தவறணைக்கு போக வேண்டும்.அங்கேயிருப்பவர் பிளாஸ்ரிக் கலனுக்குள் அந்தக் கள்ளை ஊத்திவிட்டு சில்ல- றைகளை எண்ணிக் கொடுப்பார்

அதைக் கொண்டுவந்து மனிசியிடம் கொடுத்தால் அவள் அடுத்தநாள் சமையலுக்கு,குழந்தையின் மருந்துக்கு,வேறுக்கு என்று மனக்கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டு,புதிதாக யாரிடம் கடன் வாங்கலாம் என்று யோசிப்பாள்.

மத்தியானம் ஆக்கிவைத்து மிஞ்சியதை இவர் சாப்பிட்டுவிட்டு மறுநாள் மறுபடியும் பனைகளில் ஏறுவார்.உயிரை ஓலைகளுக்கிடையில் வைப்பார்.பாளை சீவுவார்....

"என்னடி வானத்தையே பாத்துக் கொண்டிருக்கிறாய்?கடவுள் வந்து பிரச்சினையை சொல்வ் பண்ணலாமெண்டு நினைக்கிறியோ"சுதா மீனுவைக் கலைத்- தாள்.

"தற்சேலா அப்பிடி வந்தால்செல்லடிக்கையிக்க என்னண்டுதான் தப்பப் போறூர் எண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யோசிச்சனான். நீயும் உன்ரை கடவுளும். யதார்த்தமா நாங்கள் சந்திக்கிற பிரச்சினையளை நாங்களே தீர்க்க முயற்சிக்காமல் கற்பனை பாத்திரம் ஒண்டிட்ட எல்லாத்தையும் பொறுப்பு குடுத்திட்டு, இருக்கிற தலையையும் ஆரேன் வெட்டிக் கொண்டு- போய் றோட்டில அடுக்கிறவரைக்கும் கொட்டாவி விடுறதே?"


"நீ நல்லாய்தான் மாறி போனாய். ஒரே சீரியசாய் போனாய். முந்தி மாதிரி நோமலாய் கதைக்கிறாய் இல்லை"

"சீ. அப்பிடியொண்டுமில்லை சுதா. என்னை வித்தியாசம் படுத்திப் பாக்காதை. உன்னோடை நான் மனம்விட்டுக் கதைக்காம வேற ஆரோட கதைக்கிறது"

"நான் சும்மா பகிடிக்கு"

"பறவாயில்லை. இப்பிடி நாங்கள் எல்லாம் கதைக்கிற- விசயங்கள் எங்களால தவிர்க்க முடியாத விசயங்கள்தான். எந்த நாளும் கொலையும், கொள்ளையும், கடத்தலுமாய் இருக்கேக்க பூவைப் பற்றியோ, பூனையைப் பற்றியோ கதைக்கலாமெண்டு நீ நினைக்கிறியே?"

"என்னவோ நீ எல்லாத்துக்கும் மறுமொழி சொல்லிப்- போடுறாய். உனக்கு நியாயமாய் படுறதுகளுக்கு வக்காலத்தும்வாங்கிப் போடுறாய். ஒண்டு மட்டும் எனக்கு விளங்கேல. உனக்குள்ள எப்பிடி உவ்வளவு ஆழமான நம்பிக்கையள் இருக்குது?"



"அங்க பாத்தியளே? நேற்றுவரைக்கும் சோந்துபோய் சோம்பலாய் திரிஞ்சு கொண்டிருந்த சந்தி வீட்டுப் பெடிப்- பிள்ளை இண்டைக்கு வலு உசாராய்திரியிறார். லேகியம் சாப்பிட்டுட்டானோ?"

"உஷ். மெல்லமாய் கதையுங்கோ. வளவுக்க ஆரோ தட்டு வைச்ச ஏகே- போட்டி செவனை கிண்டி எடுத்துவைச்சிருக்கிறனாம்"

- கீர்னன்று

"உனக்கும் கூட இருக்க வேணும். அப்பதான் வாழ்க்கை வாழ்க்கையாயிருக்கும். உதாரணத்துக்கு ஒரு விசயத்தை எடுப்பம். எண்பத்தி மூன்டாம் ஆண்டு கலவரம் நடக்கேக்க எல்லாரும் என்ன நினைச்சனுங்கள்? சிங்களவர் எங்கள் எல்லாரையும் சாக்காட்டப் போயினம். இல்லாட்டி நாட்டைவிட்டு துரத்தப் போயினம் எண்டுதானே? அதே மாதிரி தமிழர் எல்லாரும் பயங்கரவாதியள்தான் எண்டு அரசு சொன்னதை சிங்களவர் பக்கத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திலயும் பெரும்பான்மை நம்பிச் சுது. ஆனா இண்டைக்கு என்ன நிலமை? தங்கடை அரசு ஏவிவிட்டு, தங்கடை இன இராணுவம் பொலிசே தங்களை கொலை செய்யேக்க அந்த சனங்களுக்கும் இப்ப உண்மை விளங்கியிட்டுது தங்கடை எதிரி தமிழர் இல்லை அரசாங்கம்தான் எண்டு."

"தங்களுக்கு எண்டு வந்தாப்போலதான சிங்களவரும் உண்மைநிலையை உணருயினம். இல்லாட்டி இல்லைத்தானே?"

"அதில பிழையேயில்லை. நாங்கள் எல்லாரும் எப்ப பிரச்சினையைப் பற்றி வடிவாய் ஆராய வெளிக்கிட்டனுங்கள்? எங்கட வீடு எரிஞ்சு, எங்கட குடும்பத்தில ஒராள் கொல்லப்பட்டு அல்லாட்டி காணாமல்போன பிறகுதானே? எங்களை எப்ப பிரச்சினையள் நேரடியாய் பாதிச்சுதோ அப்பதான் நாங்கள் முழிச்ச மாதிரி, சிங்களச் சனமும் இப்ப தங்கட வீட்டுக்குள்ளயே கொலைப்பட்டாளங்கள் வரேக்கை உண்மையை உணருயினம். இது சாதாரணம். எல்லாரும் மனிசர் தானே?"

"இனிமேல் உன்னோடகதைக்கிறதெண்டால் நானும் புத்தகங்கள் படிச்சாத்தான் சரிபோலகிடக்கு. அரைவாசிக்கு மேல விளங்குதே இல்லை"

மீரா இப்போதும் சிரித்தாள். மாலை மஞ்சள் கருகிக் கொண்டு வந்தது. பக்கத்து வீடுகளில் மின்சாரம் விளக்குகளை எரிக்க ஆரம்பித்துவிட்டது.

"கதைச்சுக் கொண்டிருந்ததில நேரம் போனதே தெரியேல. நான் வரப்போறன்" மீரா எழுந்துகொண்டாள்.

"நில்லன். சாப்பிட்டுப்போகலாம். பிறகு அண்ணாவைக்கொண்டுபோய் விடச் சொல்லுறன்" சுதா அன்போடு கேட்டாள்.

"சீ.. வீட்டில அம்மா பாத்துக்கொண்டிருப்பா. இன்னொருநாள் பகல் பாப்பம். நாளைக்கு வேலைக்குப் போகேக்க சந்திப்பம்" மீரா விடைபெற்று படலையைத் திறந்துகொண்டு தெருவுக்கு வந்தாள்.

முன்பு சனங்கள் பாதையில் நடமாடினார்கள். இப்போது அநேகமாக பெண்களும், வயோதிபர்களுமே தெரிந்தார்கள்.

பிள்ளைகளைக்கூடக் காணவில்லை. சகோதரங்கள் வெளிநாடுகளில் இருந்தால் ஜேமனி சுவிஸ், லண்டன் என்று போயிருக்கலாம். காசைச் சேகரித்துக்கொள்ள முடியாதவர்கள் பலவந்தமாகத் தொண்டர் படைக்கு இழுக்கப்பட்டு, மொட்டையடிக்கப்பட்டு, மோதலுக்குப் பலியாக தள்ளிவிடப்பட்டிருக்கலாம். அல்லது தன்னைப் போலவே விபரம் தெரியாதவர்களைப் பழிவாங்குவதற்காக எதிரணியில்சேர்ந்து ஏகே நாற்பத்தியேழைத் தூக்கிக் கொண்டு திரியலாம்.

(தொடர்ச்சி 30ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

ஜனவரி 1990 கலம்: 25

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ........... தென்னாசிய நிறுவனம்

முகவரி ............. THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633

சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

6 மாதங்கள் – 20 டி.எம்.
1 வருடம் – 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கான சந்தா விபரம்

6 மாதங்கள் – 25 டி.எம்.
1 வருடம் – 48 டி.எம்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளிலுள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

உங்கள் சந்தாக்களை கீழுள்ள வங்கி விபரங்களின்படி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சந்தா அனுப்பியதும் அவ்விபரத்தை கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனால் காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

வங்கி கணக்கு இலக்கம் 571 001 799
Stadt Sparkasse Dortmund
BLZ 440 501 99

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விஞ்ஞானம்

பூமியின்
வானச் சட்டையில்
ஓசோனின் கிழியல்கள்

இதன்
நிர்வாணங்களுக்குள்ளே
சூரியக் கண்களின்
கற்பழிப்பு...

அவை
பூமிக்கு எறிந்த
கூலிக் காசுகள்
புதிய
விசக் கிருமிகளும்
கதிர்களும்தான்.

தொழிற்சாலைகளோ
புகைத்தலை
நிறுத்துவதாய் இல்லை...

இதோ
பூமியின் நுரையீரலில்
புற்றுநோய்

எரிமலைகளும் அடிக்கடி
பீடிகளைப் புகைப்பதால்
வானமோ
பயந்து போய்
மழையாக அழுகிறது...

கடலுக்குள்ளும்
மண்ணுக்குள்ளும்
அணுக்கழிவுகளைப் புதைப்பதால்
பூமிக்கு மட்டுமல்ல
புற்றுநோய்
மனிதர்களுக்கும்தான்.

விஞ்ஞானமே
வியாழனுக்கு
ராக்கெட் வேண்டாம்.

எங்கள்
வாழ்க்கைக்கு
விடியலைக் கொடு.

காங்கேசன் கோவிந்தமோகன்